Reg. No. M.

ஸமரஸ போதினி.

"The Samarasabodhini"

"தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்.''

''எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்.''

E சூரியநாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர். E. Suryanarayana Aiyar B. A., B. L., *Editor*

புத்தகம் 1. | ரௌத்திரி௵ ஆனி௴ ௩௧௨ புதன்கிழமை 14th July 1920. தஞ்சாவூர். | பிரதி 5.

ஸமரஸ போதினி.

இஃதொரு தமிழ் வாரப்பத்திரிகை. புதன்கிழமை தோறும் தஞ்சையினின்றும் வெளிவருவது. இந்தியர்கள் பிரிட்டிஷாரைப்போல சுதந்தரமும் பூரணசுய ஆட்சியும் பெற்று உலகத்தார் கண் முன்பு சுகமாகவும் தைரியமாகவும் வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பத்திரிகை ஆரம்பித்து நடத்தப்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் காங்கிரஸை முழுமனத்துடன் ஆதரிப்பதாகும். அரசியல், கல்வி, விவசாயம், தொழில், வியாபாரம், தொழிலாளர் இயக்கம் முதலிய விஷயங்கள் இப்பத்திரிகையில் நன்கு விவரிக்கப்படும். எளியவர்களும் இதை வாங்கிப் படிக்கவேண்டி இதன் சந்தாவைக் குறைத்து வைத்திருக்கிறோம்.

சந்தா விவரம்:—

இந்தியா, பர்மா, சிலோன்
முதலிய விடங்களுக்கு ரூ 5—0—0
ஆறுமாதங்களுக்கு .... ரூ 3—0—0
பினங்கு, *சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு ரூ 7—0—0
ஆறுமாதங்களுக்கு .... ரூ 4—0—0

குறைந்த விளம்பர விகிதம்:—

பத்தி 1க்கு மாதம் 1க்கு ரூ 20—0—0
இஞ்சு 1க்கு .... ரூ 1—0—0
For One month 4 insertions per month per column Rs. 20—0—0
Casual Advertisements @ 1—0—0 per inch.
3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

விஷயதானம் :— செய்பவர்கள் நல்ல வியாசங்களை ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை இவ்விடம் வந்து சேரும்படி எழுதி அனுப்பவேண்டும். எழுதுவோர் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தனித்தனி எழுத்தாக எழுதி அனுப்பவேண்டும்.

நல்ல வியாஸங்கள் எழுதுவோருக்குத் தகுந்த ஊதியம் கொடுக்கப்படும். முழு விபரங்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

நவீனம்! நாகரீகம்!!

ஓரியண்டல்.

சுய ஆட்சிக்குவழிகாட்டி
பட்டு அங்கவஸ்திரங்கள்.

ஓம்ரூல் சேலைகள். (காப்பிக் கலர், டீக்கலர், கோக்கோ கலர், காங்குகலர்,)
தற்கால பாங்கான ஜமக்காளங்கள் எங்களிடம் மிக சரசமாய்க் கிடைக்கும்.

விலாசம் :— ஓரியண்டல் வேர் ஹவுஸ்,
அய்யங்கடை, தஞ்சாவூர்.

லண்டன் வாச்சு & கோ.,
திருவாதி, தஞ்சை ஜில்லா.

இதை ஒவ்வொருவரும் கவனியுங்கள்.

தக்கலாபம். எங்களுடைய உண்மையை ஒரே தடவை பரிசோதித்து பாருங்கள் அப்போது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். வரவழைத்து திருப்தி இலலாவிட்டால் உடனே ரூபாயை வாபஸ் செய்து விடுகிறோம்.

விபரம் :—புதிய பாக்கெட் லீவர் வாச்சு 5 வருஷம் உத்திரவாதமும் நடத்தாளவும் இந்தியன் கவர்ன்மெண்டு குண்டுக்குச் சரியான காலத்தைக் காட்டக்கூடியது.

1. புதிய பாக்கெட் லீவர் வாச்சு 5—0—0
2. ஷை மாதிரி கையில் கட்டிக் கொள்ளக்கூடியது சிலண்டர் 6—0—0
3. ஷை அசல் சொக்க வெள்ளி 8—0—0
4. ஷை மாதிரி நிக்கல் ரேடியம் டையலுள்ளது 7—8—0

இதைத்தவிர ஒமிகா, பிரிடியன், கெடியாரங்கள் விலே சரசமாய் வேண்டியவர்கள் அரை அணா

தேவை.

சந்தாதாரர்களைச் சேர்க்கவும் விளம்பரங்களைச் சேகரிக்கவும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்,
ஸமரஸ போதினி ஆபீஸ்,
எல்லேயம்மன் கோவில் தெரு,
தஞ்சாவூர்.

Kerosine Gas Stoves.
கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.
கோரனேஸ்ட்வ் நே. 5. ரூ 14-0-0.
லன் கம்பெனி,
தஞ்சாவூர்.

ஸ்டாம்பு அனுப்பி கிரயஜாப்தா பெற்றுக்கொள்ளலாம். ஆர்டர் செய்வோர் பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டு எழுதவும்.

பெரியாரின் ஜீவிய சரிதம்.

திலகர் பெருமான்.

(7-ந் தேதி போதினியின் 11-ம் பக்கத் தொடர்ச்சி)

IX. கணபதி திருவிழாவும் சிவாஜி பண்டிகையும்.

திலகர் பெருமான், இந்தியாவைப் பல வழியிலும் வருத்தி இன்னல் புரிந்து வரும் அதிகார வர்க்கத்தவரின் ஆட்சி முறையை அறவேயொழித்து ஆங்கிலச் சுதந்தர முறையை நிலைநிறுத்தும் பொருட்டு அவதரித்த குருமூர்த்தியாகையால் அதற்குரிய வழிகளைத் தேடவாரம்பித்தனர். "பாரத நாடு சுயஆட்சி பெறுவதாயிருந்தால் இந்தியருக்குத் தேசாபிமானம் முதிர்ந்து தேசிய உணர்ச்சி பெருகவேண்டும். அந்நியரின் பழக்க வொழுக்சங்களைச் சிறந்தவெனக் கருதி, அவற்றை இந்தியச் சமூகத்தில் புகுத்தலாகாது. அப்படிச்செய்வதால் நமது சன்மார்க்கங்களிலும் நீதி முறைகளிலும் வாலிபர்கள் நம்பிக்கையிழந்து விடுகிறார்கள்; நமது பெரியோர்களை அலட்சியஞ் செய்கிறார்கள்; நமது மதத்தை இகழ்கிறார்கள்; நமது நாகரிகத்தைப் புறக்கணிக்கின்றார்கள். அவ்விதமின்றித் தேசாபிமானமும் தேசியஉணர்ச்சியும் செழிப்பதற்கறிகுறியாய் நாட்டிலுள்ளோருக்குப் புராதன நாகரிகத்திலும் இந்து சாத்திரங்களிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் நம்பிக்கை யதிரிக்கவேண்டும். இந்திய தர்மங்களை இந்தியர்கள் அனுட்டிக்க வேண்டும். இந்தியத் தெய்வங்களைப் பயபக்தியுடன் வணங்க வேண்டும். இந்திய வீரர்களிடத்து உண்மையான அன்பும் ஆர்வமும் பெருமையும் கொள்ள வேண்டும்" என்பது திலகரின் திண்ணமான கொள்கை. திலகர்பிரான் தம் கொள்கையைப் பிறருந் தழுவுமாறுக் கணபதி சிவாஜியுர்சவங்களைநடத்தத்தீர்மானித்தனர். ஆண்டாண்டு தோறும் விநாயகசதுர்த்திதினம் தொட்டுப் பத்துநாள்வரை பூனாவிற் கணபதி திருவிழா கொண்டாடப்பட்டுவந்தது. அந்நாட்களில் அரசியற் பிரசங்கங்களும் தேசியப்பாக்களும் வேதாந்த உபந்நியாசங்களும், கடவுள் வாழ்த்தும் மற்றுமரியவநேக விடயங்களும் நடைபெறும் வழக்கமுண்டாயது. உற்சவ முடிவுநாளில் விநாயகர் சிலையைப் பல்லக்கிலேற்றி ஊர்வலஞ் செய்து குளத்திலெறிந்து விடுவார்கள்.

இம்மாதிரியே பிரதிவருடமும் சிவாஜி பிறந்த தினமுதல் ஆறேழுநாட்கள் சிவாஜி பண்டிகைத் தினங்களாய் விளங்கின. அவ்வமயம் ஏராளமான ஜனங்கள் விஜயஞ் செய்வார்கள். ஆடலும்பாடலும்ஊர்வலமும் பிரசங்கங்களும் ஏனைய கொண்டாட்டங்களும் இக்காலங்களில் நடைபெறும்.

1896 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இருபத்து மூன்றும் நாள் திலகர் பிரான் தமது "கேசரி" பத்திரிகையில் கொலாபா ஜில்லாவிலுள்ள ரைகாட் கோட்டையிலமைக்கப்பட்டிருந்த சிவாஜி மஹாராஜாவின் சமாதியைச் சீர்படுத்துவதற்குப் பணந் தேவையென்றும் பூனாவிலுள்ள தேசாபிமானிகள் முன்வந்து திரவிய வுதவி செய்ய வேண்டுமென்றும் ஒரு வியாசமெழுதினார். கொஞ்ச நாளில் இருபதினாயிரம் ரூபாய் வசூலாயிற்று. அந்நாள் தொட்டு அநேக விடங்களில் சிவாஜி பிறந்ததினத்தைப் பொது ஜனங்கள் உற்சவதினமாகக் கொண்டாடவாரம்பித்தார்கள். 1896 ம் வருடம் பூனாவில் சிவாஜி பண்டிகை வைபவத்துடன் திலகர்பிரான் அக்கிராசனத்தின் கீழ் நடந்தேறியது. சிவாஜியின் சரித்திரத்தைப் பற்றியும் அவரதுவீரச்செயல்களைக் குறித்தும் வந்திருந்தவர்களில் அநேகர் பேசினார்கள். 1897 ல் பிளேக் வியாதியின் தொந்தரவினால் சிவாஜி பிறந்த தினத்தில் பண்டிகை நடைபெறாது, அப்பெரியார் முடி சூட்டுக் கொண்டாட்டதினமாகிய ஜூன்மாதம்பதின் மூன்றாந்தேதியில் வெகு சிறப்புடன் கொண்டாடப்பட்டது. தெய்வவணக்கம், வேதரகசியம், சிவாஜியின் பெருமை, சுதேசி, தேசியக்கல்வி தேசாபிமானம் முதலிய விடயங்களை பற்றி யுபந்நியாசங்கள் நடந்தன. அக்கூட்டத்தில் அக்கிராசனம் வகித்த திலகர் பிரான் பகவத் கீதையின் உட்பொருளை விளக்கி ஒவ்வொருவனும் தன்கடமையைத் தவறாது செய்ய வேண்டுமெனவும் எத்தகைய இடுக்கண் நேர்ந்த போதிலும் அதைப் பொருட்படுத்தாது தேசத்தின் முன்னேற்றத்துக்குப் பாடுபடவேண்டுமெனவும் கூறினார். ஜூன் மாதம் பதினைந்தாம் நாள் வெளிவந்த கேசரியில் சிவாஜி யுற்சவத்தில் நடைபெற்ற சமாசாரங்கள் யாவும் சுருக்கமாய் வெளியிடப் பட்டிருந்தன.

X. திலகரின் சிறைவாசம்

உடல் வாழ்க்கை பிறர்க் கென்னும் உறுதி
மொழிச்செழும்பொருளைக்
கடைப்பிடித்துச் செயல்வழியே கண்டது
வுஞ் சிறையன்றே
திரு. வி. க.

ஜூன் மாதம் இருபத்திரண்டாந்தேதி, ராண்டு, ஐரஸ்டு என்ற விரு ஆங்கிலவதிகாரிகள் பூனாவில் கொலையுண்டனர். வெகு காலந்தேடியும் கொலையாளிகள் அகப்படவில்லை. பூனாவிலும் பம்பாயிலுமுள்ள வாங்கிலருஞ்சட்டைக்காரரும், திலகர்பெருமான் கேசரியில ராண்டு எனும் வெள்ளையன் இதர ராணுவ உத்தியோகத்தினரால் பிளேக் விசாரணைக் காலத்துப் பூனாநகரில் நேர்ந்த செயல்களை யெதிர்த்து எழுதியதின் பயனாகவே இக்கொலைகள் நடந்தனவென்று பிதற்றவாரம்பித்தனர். திலகர்தமதுபத்திரிகைகளில் இக்கொலையைப் பலமாகக் கண்டித்து இறந்தவர்களுக் கனுதாபங்காட்டியது மன்றிக் கொலையாளிகளுக்கு அரசாங்கத்தார் தகுந்த தண்டனை விதிக்க வேண்டுமெனவும் பொதுஜனங்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவிபுரிய வேண்டுமெனவும் வற்புறுத்தி வந்தார்.

ஜூலை மாதம் இருபத்தாறும் நாள் திலகர் பிரான் மீது அரச நிந்தனைக்குற்றஞ் சாட்டி வழக்குத் தொடருமாறு பம்பாய் மாகாணவதிகாரிகள் அனுமதியளிக்க, மறுநாள் பெயிக் எனும் மொழிபெயர்ப் போர் மாகாண நீதிபதிமுன் விசாரணைக்கு வேண்டிய சாட்சியங்களைக் குறித்து வைத்தனர். அன்றிரவு பம்பாயில் திலகர் கைது செய்யப்பட்டுப் பிந்திய நாட்காலை நீதிபதி முன் கொண்டு போகப்பட்டார். திலகரை ஜாமீனில் விடும்படி எவ்வளவோ மனுக்கள் செய்தும் பயன் படவில்லை. ஆகஸ்டு மாதம் இரண்டாம் நாள் திலகர் விசாரணை ஐகோர்ட்டுக்குமாற்றப்பட்டது. டயாப்ஜியென்ற ஒரு நியாயாதிபதி திலகர்பெருமான் சாதாரண மனிதரல்லரெனக் கருதி அவரை ஜாமீனில் விடுதலை செய்தார்.

செப்டம்பர் மாதம் எட்டாந்தேதி முதல் ஒரு வாரம்வரையில் திலகர் வழக்கு ஸ்ட்ராட்சி யெனும் ஆங்கிலர் முன்னிலையில விசாரணை செய்யப்பட்டது. விசாரணை தொடங்குமுன் திலகரின் நண்பர்களிலநேகர் அதிகாரிகளைக் குறித்துத்தாம் எழுதியதற்கு அரசாங்கத்தாரிடம் மன்னிப்புகேட்டுக்கொள்ளும்படிக்கும் வீணாய்விவாதத்தைத் தொடரவேண்டாமென்றும் அவருக்கு வற்புறுத்தினார்கள். திலகர் பெருமான் அதற்கிடங்கொடுக்கவில்லை. உண்மையை ஒளியாது வெளியிடவேண்டியது பத்திராதிபரின் கடமையென்றும், பொதுநலத்திற்குழைத்ததின்பொருட்டுச்சிறை புக நேர்ந்தால் தாம் சிறைச்சாலையைத் தவச்சாலையாகக் கொள்ளத்தயாராயிருப்பதாகவும், மன்னிப்புக்கொடுக்கமறுப்பதாகவும் திலகர் கூறினார். முடிவில்விசாரணை நிமித்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தஜூரிகளில் மூன்றுஇந்தியர்கள் திலகரைக்குற்றவாளியல்லவென்றும் ஆறு ஐரோப்பியர்கள் குற்றவாளியென்றும் அபிப்பிராயங்கொடுத்தார்கள். நீதிபதி மராத்திபாஷையறியாத ஆங்கிலேயர்களின் அபிப்பிராயத்தை யொட்டித் திலகருக்குப்பதினெட்டு மாதங் கடுங்காவல் தண்டனை விதித்தார். தாம் கூறிய தீர்ப்பில், ஸ்ட்ராட்சி பூனாவில் பிளேக் பரவியபோது திலகர் ஜனங்களுக்குச் செய்திருக்கும் நன்மைகளைப் புகழ்ந்திருக்கின்றனர். சட்டசம்பந்தமான சில குறிப்புகளை ஐகோர்ட்டிலுள்ள எல்லா நீதிபதிகளுக்கு முன்விவாதிக்கவேண்டுமென்றுத் திலகர் தரப்பில் கொடுக்கப்பட்ட மனு அங்கீகரிக்கப்படாததுமன்றி, இங்கிலாந்திலுள்ள கவுன்சிலுக்கு அவர் தம்வழக்கைக் குறித்து மனுச் செய்து கொள்ளுவதற்குக் கேட்ட வேண்டுகோளும்நிராகரிக்கப்பட்டது.

தண்டனையை விலக்கவேண்டுமென்று திலகர்பெருமான் பிரிவிகவுன்சிலுக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டார். ஆங்கில ஏகாதிபத்தியத்தில் முதன் மந்திரி பதவியை வகித்த ஆஸ்குவித் என்ற நியாயவாதி திலகர் பக்கம் வாதித்து அவர் நிரபராதியென்றும் இராஜ நிந்தனைக் குற்றஞ்செய்தவரல்லரென்றும் அதிகாரவாக்கத்தினர் அகந்தையைத் தம் பத்திரிகைகளில் திலகர்

(11-ம் பக்கம் பார்க்க.)

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாத்தொகைகளைக் காலதாமதமன்னியில் அனுப்பித்தரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

(ப. ர்.)

ஸமரஸபோதினி, தஞ்சாவூர்.

"Be just aud fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's&Truth's"

ரௌத்திரி௵ ஆனிமீ ருகஉ புதன்கிழமை.

14th JULY 1920.

கிராம சீர்திருத்தம்.

நமதுபாரதநாடாகிய இப்புண்ணியபூமி முற்காலம் போல் செல்வம், கைத்தொழில். வியாபாரம் முதலியவைகளில் செழித்தோங்கி உலகத்திற்கே ஒரு வழிகாட்டியாக வேண்டுமானால், நாம் சுயஆட்சி முறையைச் சீக்கிரம் பெறவேண்டும். தன் முயற்சியன்னியில் நாம் ஒரு காரியத்தையும் சாதிக்கமுடியாது. ஒருவரைச் சார்ந்த காரியமானபோதிலும் சரி, அல்லது ஒரு குடும்பத்தைச்சார்ந்த காரியமானாலும் சரி, அக்காரியத்தை நிறைவேற்றி அதன் பயனை அடையவேண்டுமானால், தன் முயற்சியே காரணமென்பதை அறியாதார் ஒருவருமிலர். ஒருகிராமம் முன்னேற்றத்தை அடையவேண்டுமானால், அதன் முன்னேற்றம் அக்கிராமத்திலுள்ள மகா ஜனங்களின்முயற்சியைப்பொருத்திருக்கிறது. எனவே, விரிவாக நமது தாய் நாடு முன்னேற்றம் அடைவதும் அதுமுன்னேற்றமின்றித் தாழ்ந்த நிலைமைக்கு வருவதும் நம் முயற்சியினாலேயாகும். இதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நம் முன்னேற்றத்திற்கு நாமே காரணமானால், நம் குறைகளை நிவர்த்திப்பதும் நம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதும் நமது கடமையானால், நாம் பின்பற்றவேண்டிய வழியாது? நாம் செய்யவேண்டிய வேலையென்ன? இதைச்சற்று ஆராய்வோம்.

பிரிட்டிஷ் இந்தியாவில் சற்றேறக்குறைய ஆறுலட்சம் கிராமங்களிருக்கின்றன. இவைகளெல்லாம் புராதனமான கிராமங்கள். இவைகளின் முற்கால நிலைமையையும் தற்கால நிலைமையையும் சீர்தூக்கிப்பார்த்தால், உண்மை வெளிப்படும். பிரிட்டிஷாரின் ஆட்சிக்குட்பட்ட கிராமங்களின் தற்கால நிலைமை மிகவும் சீர்கேடாகவிருக்கிறது. அதற்குக்காரணம் அவர்கள் ஆட்சி புரியும் முறையேயாகும். முற்காலத்தில்ஜனங்களின்கட்டுப்பாடும், ஒற்றுமையும் அதிகமாகவே இருந்தன. கிராம மகாஜன சபைதான் அக்கிராமத்தின்விவகாரங்களைக் கவனித்து வந்தது. கிராமத்தின் சுகாதாரமென்ன? நியாய பரிபாலனமென்ன? நீர்ப்பாசனவசதிகளென்ன? ஆலயங்களின் நிர்வாகமென்ன? இவைபோன்ற பொதுக் காரியங்களையெல்லாம் கிராமசபையார் கவனித்து வந்தார்களென்று நாம் சரித்திரங்களின் வாயிலாகவும் அதிகாரவர்க்கத்தினரின் அத்தாட்சி மூலமாகவும் அறிகிறோம். ஒரு கிராமம் தனி கிராமமாயிருந்தபோதிலும், அது எவ்விதத்திலும் பிறர் கையை எதிர்பாராமல் தானே தன் விவகாரங்களைக் கவனிக்கவும், தனக்காகவேண்டிய நன்மைகளைத் தேடிக்கொள்ளவும், தனக்குத் தேவையான பொருள்களைச் சேகரித்துக்கொள்ளவும், அப்பொருளைத் தமதிஷ்டம்போல் செலவழித்துககொள்ளவும் உரிமைப்பட்டிருந்தது. மேலும் ஒவ்வொரு கிராமத்திலும் நாட்டாண்மைக்காரர்களென்றும், கிராம அதிகாரிகளென்றும், கிராம மகாஜனங்களின் சௌகரியங்களை முன்னிட்டும், கிராம நிர்வாகத்தை உத்தேசித்தும் பல ஊழியர்கள் இருந்துவந்தார்கள். அவ்விதம் ஊழியம் செய்து வந்தவர்களுக்கு மானியங்கள் விடப்பட்டிருந்தன. கிராமப்பொதுக்காரியங்களின் செலவுக்குக்கிராமத்திலுள்ள ஜனங்களிடமிருந்து பணம் வசூலிக்கப்பட்டு "பொதுப் பணமெனும் ஒரு நிதியை" ஏற்பட்டுத்தியிருந்தார்கள். இவ்வேற்பாடுகளெல்லாம் இப்போது எங்கே போய்விட்டன?

பிரிட்டிஷ் அரசாட்சி ஏற்பட்ட நாள் முதல் நமது கிராமங்கள் பல மாறுதல்களை அடைந்துவருகின்றன. அதிகார வர்க்கத்தினரின் ஆட்சிக்குத் தக்கவாறு சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கிராமங்களில் நீண்டகாலம் தொட்டு அனுஷ்டானத்திலிருந்த வழக்கங்களையும் கொள்கைகளையும பின்பற்றாமல் அவைகளைப்புறக்கணித்துவிட்டு அவர்கள் தங்களுடைய செல்வாக்கும் அந்தஸ்தும்வளர்ந்தோங்குமாறு ஆட்சி முறையைஸ்தாபித்துக்கொண்டார்கள் அவ்வேற்பாடுகளின் பயனாகபலதீங்குகள்விளைந்திருக்கின்றன. கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் கிராம வாசிகளுக்கும் மனஸ்தாபமும், கிராமத்தில் ஒற்றுமைக்குறைவும், கட்சிப்பிரதி கட்சிகளின் விபரீதங்களும், பொது விஷயங்களில் ஊக்கமில்லாத்தன்மையும், சுகாதாரக்குறைவும், சாகுபடிசெய்வோர்களுக்குப் பலவிதமான அசௌகரியங்களும், குடிகொண்டிருப்பதை நாம் காணலாம்.

மேலே சொல்லிய குறைகளை நிவர்த்தித்துக்கொள்ளும் பொருட்டுக் கிராமங்களிலுள்ள ஜனங்கள் முன்போல் சுகமாகவும் தம் மதிப்புடனும் வாழும் வண்ணம் வழி தேடவேண்டியது தம் கடமை என்று உணர்ந்து தலைவர்கள் பலத்தகிளர்ச்சி செய்துகொண்டுவருகிறார்கள். கிராமங்களில் பல சீர்திருத்தங்கள் அவசியம் ஏற்படவேண்டுமென்று அவர்கள் அடிக்கடி அதிகார வர்க்கத்தினர்களை வற்புறுத்துகிறார்கள். இதை அறிந்த கவர்ன்மெண்டார்இம்மாதிரியான கிளர்ச்சியை வெறுப்பதோடு இதுபடித்த சிறுபான்மையோரின் கூற்றேயொழிய தேச மகா ஜனங்களின் அபிப்பிராயமல்லவென்று கருதிவந்தார்கள். ஆனால் இவ்வபிப்பிராயம் முற்றிலும் பிசகென்று புலப்பட்டுவிட்டது. அரசாங்கத்தார் இப்பொழுதுதான் கண்விழித்துக்கொண்டார்கள் போலும்.

மகாயுத்தகாலத்தில் தேச மகா ஜனங்கள் நமது அரசர் பெருமானிடம் கொண்டிருந்த ராஜவிசுவாசத்தை மெச்சி இந்தியாமந்திரியவர்களும் பிரிட்டிஷ் மகாஜனங்களும் இந்தியாவின் முன்னேற்றத்தை உத்தேசித்துச் சில உறுதிமொழிகளைக் கூறினார்கள். பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியாவிற்குச் சரிசமமான அந்தஸ்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் ஓலமிட்டார்கள். ஜனங்கள் பத்திரிகைகளின் வாயிலாய் எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டார்கள்.

இந்தியர்கள் யுத்தத்தின்போக்கை ஊக்கத்துடன்பின்பற்றினார்கள். உலகவாழ்க்கை இன்னதென்று அறிந்துகொண்டார்கள். போர்க்களத்திலிருந்து வெற்றியுடன் திரும்பிவந்த இந்திய வீரர்கள், பிரிட்டிஷார் தங்களது நாட்டில் அடைந்து அனுபவித்துவரும் சுதந்தரம் சமத்துவம் முதலிய உரிமைகளைப்பற்றியும் அரசியல் முறையைப்பற்றியும் சங்கோபாங்கமாகத்தெரிந்துகொண்டார்கள். இவ்விவரங்களையெல்லாம் நன்கு அறிந்தமகாஜனங்கள் தங்களுக்குச்சுயஆட்சி கிடைக்க வேண்டியதுநியாயமெனக்கருதித்தீவிரமான கிளர்ச்சி செய்துகொண்டுவருகிறார்கள். தங்களுக்குச்சுயஆட்சிச்போர்புரியும் யோக்கியதையிருக்கிறதென்பதை உலகத்தாருக்குக் காட்டிவருகிறார்கள்.

சுயஆட்சிக்கு அடிப்படை கிராம நிர்வாகமாகும். ஆகையால் கிராமங்களில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை முதலில் கவனிக்கவேண்டும். கவனிக்கவேண்டிய விஷயங்கள் பலவுள. கவனிப்பதற்கு நூற்றுக்கணக்கான பிரசாரவேலைக்காரர்கள் வேண்டும். பிரசாரவேலை செய்பவர் ஒருவர்கிராமந்தோறும் செல்லவேண்டும். அக்கிராமத்திற்குச் சென்றவுடன் கிராம சுகாதார நிலைமையைக் கவனிக்கவேண்டும். பிறகு அவர்கிராமத்தின் பொருளாதார நிலைமையை அறிந்து கொள்ளவேண்டும். கிராமவாசிகளுடன் தாராளமாய்ச் சம்பாஷித்து அவர்

களின் மற்றகுறைகளைக் குறித்துக் கொள்ளவேண்டும்.

கட்சிப் பிரதி கட்சிகளிருந்தால் அதன் காரணத்தை விசாரித்து அவ்வூர்ஜனங்களைக்கூட்டிப்புத்திமதி சொல்லவேண்டும். அங்குப் பள்ளிக்கூடமில்லாத பட்சத்தில் அதற்குஏற்பாடுசெய்யவேண்டும். ஒருபுஸ்தகசாலையையும் ஒரு வாசகசாலையையும்ஸ்தாபிக்கும்படிசெய்யவேண்டும். கிராமப்பொதுச்செலவிற்கு ஒருபொதுப் பணநிதியைஏற்படுத்தவேண்டும். அதைநிர்வகிக்க ஒரு பஞ்சாயத்தையும் நியமிக்கவேண்டும். அப்பஞ்சாயத்தைக்கொண்டு தேவாலயங்கள் குளங்கள், பொதுக் கிணறுகள், கிராமநத்தங்கள் முதலியவைகளைக் கவனிக்குமாறுவற்புறுத்தவேண்டும். சுகாதார வசதிகளுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். அடிக்கடி கிராம மகாஜன சபைகூடும்படி செய்யவேண்டும். பிரசார வேலை செய்பவர்கிராமத்தின் குறைகளை நன்கு அறிந்தபிறகு அந்தந்த டிபார்ட்மெண்ட் அதிகாரிகளிடம் தாமதமன்னியில் தெரிவித்துப்பரிகாரங்களை தேடிக் கொடுக்கவேண்டும் இம்மாதிரி காரியங்களைச் செய்து காட்டவேண்டிய கடமை பிரசாரவேலை செய்யும்தேசாபிமானிகளின்பொறுப்பாகும். ஒவ்வொருதாலூக்காவிற்கும்பல பிரசாரவேலைக்காரர்கள் வேண்டும். ஒவ்வொருவரும் பத்துக்கிராமங்களின் மேல்பார்வையைஏற்றுக்கொண்டு இரண்டுவாரத்திற்குள் பத்துகிராமங்களையும்சுற்றிப் பார்த்து ரிபோர்ட் தயார்செய்து, தாலூகா தலைநகரிலுள்ள காங்கரஸ் சபையாருக்கு அனுப்பவேண்டும். இவ்வேலை செய்பவர்களுக்குத்தகுந்த பொருளுதவி கொடுக்கவேண்டும். அதை உத்தேசித்து ஒரு "பிரசாரபண்டு" ஏற்படவேண்டும். இதைக் கொண்டுதான் நாம் முன்னேற்றமடைய முடியும். இதைத் தலைவர்களும் அறிந்து தகுந்த ஏற்பாடுகள் செய்வார்களென்று எதிர் பார்க்கிறோம்.

இடை நிலை விளக்கு.

நேயர்கள் கவனிக்க.

நமது "சமரச போதினி" பத்திரிகை ஏற்பட்டு ஒரு மாத காலமேயானாலும் தேச பக்தர்கள் இதன்மீது பூரண அன்பு செலுத்தி, இதனை ஆதரித்து வருவதற்கு நாம் என்றும் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வாறே விஷயதான மனுப்பிப் பத்திரிகையைப் பிரகாசிக்கச் செய்கிற நண்பர்களுக்கும் நமது மனதார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம். ஆனால், பொதுவாக எல்லா நேயர்களையும் ஒரு விஷயம் கேட்டுக்கொள்கிறோம். இந்தியா சீக்கிரம் முழு சுயராஜ்யம் பெற்று உலகத்தார் கண்முன் சுதந்தர நாடாக ஆகவேண்டுமானால் முதன் முதல் தேசத்திற்கு அஸ்திவாரமாயிருக்கிற கிராமச்சீர்திருத்தம் பெறவேண்டுமென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். ஆனது பற்றி, நமது தேச முன்னேற்றத்தில் சிரத்தையுள்ளவர்கள் முக்கியமாகக் கிராமக் குறைகளையும் தேவைகளையும் நமது பத்திரிகைக்கு நன்றாக எழுதியனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். கிராமத்தார்கள் வாயில்லாப் பூச்சிகள் போல் பல குறைகளினால் வருந்தி வருகிறார்களென்பதை எல்லோரும் அறிவரென்பதில் சந்தேகமில்லை. கிராமவாசிகளுடைய குறைகளையும் தேவைகளையும், அவ்வப்போது நமக்குஎழுதி அறிவித்தால் நாம் அவைகளை நமது "போதினி" யில் வெளியிட்டுத் தக்கது செய்வோமென்பதை நேயர்களுக்கு அறிவிக்கிறோம். இக்குறிப்பை நம் நண்பர்கள் கவனிப்பார்களாக.

ஸ்ரீமான் அ. சேஷாத்திரி சர்மா.

பத்திரிகை நடத்தும் தொழிலில் நீண்டகாலம் அனுபவம் பெற்றவரும், "தேசபக்தன்" பத்திரிகைக்குச் சென்ற வாரம் வரை முதல் உதவியாசிரியராயிருந்த வருமான ஸ்ரீமான் அ. சேஷாத்திரி சர்மா அவர்கள் நமது அழைப்புக் கிணங்கி, நமது பத்திரிகைக்கு உதவியாசிரியராக வந்து சேர்ந்திருக்கிறார்களென்பதைநாம் நம் சகோதரர்களுக்குச் சந்தோஷத்துடன் அறிவிக்கிறோம்.

விசேஷ காங்கரஸ்.

கடைசியாக வந்த செய்தியினால் விசேஷக் காங்கரஸ் கல்கத்தாவில் செப்டம்பர் மாதத்தில் நடைபெறுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இப்பெரிய மகாநாட்டிற்கு இனி ஓர் அக்கிராசனரைத் தெரிந்தெடுக்கும் வேலை இனிமேமவிருக்கிறது. இதற்குத் தகுந்த அக்கிராசனர் நம் தலைவர்களில் யாவராயிருப்பர்? அவர் திலகரைத் தவிர வேறு ஒருவருமில்லை யென்பது நமது அபிப்பிராயம். தேசத்தின் நெருக்கடியான நிலையை உத்தேசித்து லோகமான்ய பாலகங்காதர திலகர் ஒருவரே இதன் அக்கிராசனப் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். பண்டிட் மோதிலால் நேரு எல்லா இந்தியக காங்கரஸ் கமிட்டி மெம்பர்கள் ஒவ்வொருவரும் ஒரு தலைவரையே அக்கிராசனப்பதவிக்குச் சிபார்சுசெய்யவேண்டுமென்று எல்லாமெம்பர்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஆகையால் ஒவ்வொரு மெம்பரும் திலகர் பெருமானை இந்த விசேஷக் காங்கரஸ் அக்கிராசனப் பதவிக்குத்தெரிந்தெடுப்பார்களென்று நம்புகிறோம்.

இஃதுண்மையான கண்டனமா?

சமீபத்தில் நின்றயுத்தத்திற்குப்பிறகு அதுவும் பஞ்சாப் படுகொலைக்குப்பின்னர் உண்மையான கிறிஸ்தவர்கள் இந்தியாவில் இல்லையென்று நினைத்திருந்தோம். நேற்று முன்தினம்வெளியான "நியு இந்தியா" பத்திரிகையில் இந்தியாவிலுள்ள சுமார் முப்பது கிறிஸ்தவப் பாதிரிமார்கள் பஞ்சாபில் இராணுவ அதிகாரிகள் செய்தசெயல்களைப்பற்றி அருவருப்பதுபோல்கண்டித்து ஒரு வியாசமெழுதியிருக்கிறார்கள்- இவர்கள் உண்மையாகவேபிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகளின் செயலைக் கண்டனம் செய்பவர்களாயின் இதுகாறும் எங்குப் போயிருந்தார்கள்? இப்போதுதான் இவர்களுக்குக் கிறிஸ்துநாதரின் போதனைகள் உதித்தன போலும்!

ஒழுங்கல்ல.

சென்றமாதம் 30ந்தேதி கும்பகோணம் தேவஸ்தான கமிட்டியின் கூட்டமொன்று நடைபெறுவதாகக்கமிட்டி அங்கத்தினர்களுக்குச்செய்தி அறிவிக்கப்பட்டிருந்ததென்றும், அவர்களில் மூவர்தவிர மற்றவர்கள் கூட்டத்திற்கு வரவில்லையென்றும் ஆகையால், அக்கூட்டம் கோரம் ஏற்படாதது பற்றி (ஒரு சபையில் அல்லது கூட்டத்தில் நடவடிக்கைகள் நடத்துவதற்குக் குறைந்த பட்சம் ஆஜராயிருக்க வேண்டியவர்களின் தொகைக்கு ஆங்கிலத்தில் கோரமென்ற பதம் உபயோகபபடுகிறது) தள்ளிவைக்கப்பட்டதென்றும் தெரிகிறது. இஃதுண்மையானால், இவ்வாறு நேர்ந்ததற்கு நாம் வருந்துகிறோம். ஜன நாயக உணர்ச்சி தேசத்தில் எங்கணும் பரவிவரு மிக்காலத்தில், நமக்கு முழு ஜனப்பொறுப்பாட்சி வழங்கப்பட வேண்டுமென்று நாம் வாதாடுமிச்சமயத்தில், பிரிட்டிஷார் உண்மைநிலையை உணராது இந்தியர்கள் ஸ்தல சுய ஆட்சிக்குக்கூட யோக்கியதையுடையவர்களல்லரென்று சொல்லுமிந்நாளில் கும்பகோணம் தேவஸ்தான கமிட்டி அங்கத்தினர்கள் முறையாகக் கூட்டத்தைக் கூட்டி நடவடிக்கைகளை நடத்தாமலிருந்ததானது ஒழுங்கல்லவென்று மாத்திரம் நாம் அபிப்பிராயப்படுகிறோம். எவரேனும் பொது ஜன சபையிலோ அல்லது ஒரு கௌரவ பதவியிலோ அங்கம் பெற்றால், அவர் தாம் ஏற்றுக்கொண்ட வேலைகளைத் திருப்தியாக செய்து முடிக்க வேண்டுவது சிறந்ததாகும். ஒரு கால் சௌகரியப்படாவிடில், அவர்கள் அந்தப்பதவியினின்றும் விலகிக்கொள்ளவேண்டும்

பிராமணரல்லாதார் மகா நாடு.

பொதுவாக ஒரு மனிதன் சீர்திருத்தமடைந்தால் அவன்வழிபற்றி அவனது குடும்பம் சீர்திருத்தமடையும். ஒரு மனிதனின் குடும்பம் சீர்திருத்தம் பெற்றால் அவனிருக்கும் கிராமம் அவன் குடும்பத்தை முன் லட்சியமாகக் கொண்டு சீர்திருத்தம் பெறும். இவ்வாறே கிராமத்தைப் பார்த்து ஜில்லாவும், ஜில்லாவை நோக்கியாகாணமும் மாகாணத்தைக்கண்டு நாடும் அபிவிருத்தியடையுமென்பது சரித்திர அனுபவம். நாம் இந்தச் சரித்திர அனுபவத்தைச் சிறப்பாகக் கொள்ளுதலால், தேசத்திலுள்ள ஒவ்வொரு சமூகமும் அதனதன்முன்னேற்றத்துக்குரிய வழிகளைத் தேடி அவைகளைக் கடைப்பிடித்தொழுக வேண்டுவது அவசியமென்பது நமதுநோக்கமாகும். ஆனால் ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரைத் துவேஷித்துக் கொண்டும் வைது கொண்டும் முன் செல்லலாமென்று யோசிப்பது பைத்தியக்காரத்தனம் என்றேநாம்கூற

வேண்டும். நாகப்பட்டினத்தில் நடைபெறப்போவதாகவிருக்கும் பிராமணரல்லாதார் மகா நாடு உண்மையாகவே பிராமணரல்லாதார்களின் முன்னேற்றத்தைக் கருதி கூட்டப்பட்டால் அதைப்பற்றி நாமொன்றும் குறைகூறப்போவதில்லை. ஆனால், பலவருஷங்களாகக் கூட்டப்பட்டு வரும ஜில்லா அரசியல் மகா நாட்டைப் பிராமணர் மகா நாடென்றும் அதில் பிராமணரல்லாதார் சேரவில்லையென்றும கூறுவது அஸம்பாவிதமாகும். ஜில்லா அரசியல் மகா நாடு ஜில்லாவிலுள்ள எல்லா வகுப்பினர்களுக்கும் பொதுவானது. அதில்யாவரும் பங்கெடுத்துக்கொள்ளலாம். அதில் எல்லாச் சமூகத்தினர்களுக்கும் பொவான க்ஷேம விஷயங்கள் கவனிக்கப்படுகின்றன. உண்மை நிலை இவ்வாறிருக்க, பாபவிநாசத்திலகூடவிருக்கும் மகாநாட்டைச் சில பிராமணரல்லாதார் நிந்திப்பதும், குறை கூறுவதும் அஃதொரு வகுப்பினர் மகா நாடென்று சாதிப்பதும் தகாத காரியமாகும்.

கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள்.

சென்னை மாகாணத்தில் இது வரையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள் சங்கங்களில கவர்ன்மெண்ட் கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் சங்கம் செய்து வரும் வேலைகளை நாம் கொண்டாடாமலிருக்கமுடியவில்லை. கவர்ன்மெண்டார் தங்களுக்குச் சம்பளத்தோடு பத்து ரூபா அலவன்ஸ் கொடுத்திருப்பதுபோதாதென்றும் அகவிலையை உத்தேசித்து அதிக சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் அப்படிக் கொடுக்கத் தவறினால் பத்து ரூபா அலவன்சைத் தாங்கள் பெற்றுக்கொள்ளப்போவதில்லையென்றும் இச்சங்க நிர்வாக அங்கத்தினர்கள் தீர்மானம் செய்திருக்கிறார்கள். செகரிடேரியட் சங்கத்தாரும் இவ்வாறே தீர்மானம் செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இச்சங்க அங்கத்தினர்களில் ஒரு சிலர் தங்களுடைய கஷ்ட தசையை உத்தேசித்து இபபோது வழங்கப்பட்ட அலவன்சைத் திருப்பிக்கொடுக்க மனமில்லாதவர்களாயிருக்கிறார்களென்று அறிகிறோம். இச்சங்க நிர்வாக கமிட்டியார் கூறுவதுபோல கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய தற்கால நிலையை மாத்திரம் கவனித்தல் கூடாது. அவர்கள் தங்களுடைய வருங்கால நிலையை முக்கியமாகக்கவனிக்கவேண்டும். ஒரு சூட்சமத்தை நம் நேயர்களுக்கு அறிவிக்கிறோம். தைரியமாகவும் உண்மையாகவும் கிளர்ச்சி செய்தாலன்றி அதிகார வர்க்க கவர்ன்மெண்டினிடம் நியாயம் பெறுதல் அசாத்தியமென்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

பசப்பு வார்த்தை யேன்?

இந்திய மந்திரியான மிஸ்டர் மாண்டேகு தம் உண்மைக் குணத்தைக்காட்டிவிட்டார். இவர் பேசும் பேச்சுக்களிலும், எழுதும் எழுத்துக்களிலும் நமக்கு எப்போதும் சந்தேகமுண்டு. நாம் இவர் பால் கொண்டிருந்த சந்தேகம் டயர் சம்பந்தமாகப் பார்லிமெண்டில் பேசப்பட்டப் பேச்சினால் உறுதிப்பட்டுவிட்டது. இவர் இந்திய மந்திரியாவதற்கு முன்பு மெஸபொடோமியா கமிஷன் ரிபோர்ட்டைப்பற்றிப் பிரமாதமாகக் கண்டித்துப் இந்தியர்களுக்குப் பரிந்து பேசி, பொய்க் கண்ணீர் வடித்தார். இந்தியா மந்திரியான பிறகு, இவர் இதுகாறும் பசப்பு வார்த்தைகளைப் பேசியே மிதவாதிகளைத் தம் பக்கத்திலிழுத்துக்கொண்டு ஊரை இரண்டு படுத்திக் கட்சி பேதங்களை அதிகப்படுத்திவிட்டார். இவையெல்லாம் போதாவென்று மிஸ்டர் மாண்டேகு இப்போது போலிக் கண்ணீர் வடித்து "இந்தியாவில் இராணுவ ஆட்சி கூடாதென்றும் இந்தியர்களைப் பயமுறுத்தி ஆளக்கூடாதென்றும்" வருத்தமுற்றுப் பேசுவதுபோல் இந்தியர்களின் கண்ணைத் துடைக்கப் பார்க்கிறார். இனி இவ்வாறான பேச்சுக்களை நம்பி இந்தியர்கள் ஒருகாலும் மோசம் போகமாட்டார்கள். பஞ்சாபில் செய்யப்பட்ட அக்கிரமங்களுக்குத் தக்கபடி ஈடு செய்யப்பட்டுக் குற்றம் செய்த அதிகாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டுமென்பது இந்தியர்களுடைய கோரிக்கை. இது நிறைவேற்றப்படாதவரையில் இந்தியர்கள் சும்மாவிருக்கமாட்டார்கள்.

உலகப்போக்கு

ஜில்லா

தஞ்சை நகர வரிசெலுத்துவோரின் கூட்டமொன்று சென்ற வியாழக்கிழமை கூடியது. அவ்வமயம் சங்க உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

தஞ்சை மெடிகல் ஸ்கூல் மிஸ்டர் வி. எஸ். கணபதி ஐயர் திருப்பதிமுனிஸிபாலிட்டிக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

ஸ்ரீமான் கே. பாண்டாராம் குழந்தைவேலு நாயுடு அவர்கள் மன்னார்குடி முனிஸிபல் கவுன்ஸில் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

திருவள்ளூர் ரேஞ்சு சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டரான (இப்போது பட்டுக்கோட்டை ரேஞ்சில் உத்தியோகம் பார்ப்பவர்) மிஸ்டர் வி. எ வேங்கடசுப்பைய்யா ஜூன் மீ முதல் தேதியிலிருந்தேனும் அல்லது அவர் ரஜா எடுத்துக்கொள்ளும் தினத்தன்று முதலேனும் மூன்று மாதம் ரஜா கொடுக்கப்பட்டிருக்கிறார்.

நீடாமங்கலம் மராமத்து இலாகா கீழ்த்தரச் சிப்பந்திகள் தங்களுடைய குறைகளைப்பற்றி ஐந்து மீட்டிங்குகள்கூடி தீர்மானங்கள் செய்து கவர்ன்மெண்டாரவர்களுக்கு மெமோரியல் அனுப்பியிருக்கிறார்களென்றும், இதனால இதுவரையில் யாதொரு பிரயோஜனமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை யென்றும், தங்களுடைய பரிதாபநிலையைக்குறிப்பிட்டு அவர்கள் மெமோரியலில் எழுதியிருக்கிறார்களென்றும் தெரிகிறது.

உள்நாடு

1888ம் வருஷத்து [illegible] கோர்ட் சட்டத்தின் 9-வது செக்ஷன் மு[illegible] பிரிவின்படியும் 1920ம் வருஷத்து திருத்தப்பட்ட கிராமகோர்ட் சட்டத்தின் பிரகாரமும் கோயமுத்தூர் ஜில்லாவில் 59 கிராமங்களில் கிராமப்பஞ்சாயத்து கோர்ட்டுகள் ஏற்படுத்தப்படுமென்று ஒரு கவர்ன்மெண்ட் அறிக்கை கூறுகிறது.

இம்மாதம் 10ந் தேதி நடந்த திருப்பதி முனிஸிபல் கவுன்ஸில் கூட்டத்தில், திருப்பதிக்குப் போகும் பிரயாணிகளுக்கு பிரயாண வரி விதிக்கக் கவர்ன்மெண்டார் உத்திரவு கொடுக்கவேண்டுமென்ற ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

சீர்திருத்த சட்டவிதிகளைப்பற்றி ஆலோசனை செய்த ஜாயிண்டகமிட்டியார் தங்களுடைய முதல் ரிபோர்ட்டை வெளியிட்டிருக்கின்றனர். பொதுவாக இந்தியா கவர்ன்மெண்டாரும் மாகாணகவர்ன்மெண்டார்களும் செய்த விதிகளையே அங்கீகரித்திருக்கின்றனர்.

சென்னைமாகாணத்தில் பிராமணரல்லாதாருக்குச் சட்டசபையில் மெஸ்டன் கமிட்டியாரால் பிரத்தியேகப்படுத்தப்பட்டிருந்த ஸ்தானங்களை ஜாயிண்ட் கமிட்டியார் உறுதி செய்துவிட்டனர்.

சென்னைத் தொழிலாளர் நிலையை ஆராய்ந்து விசாரிக்க எற்படப்போகும் கமிட்டிக்கு கனம் ஜஸ்டிஸ் குமாரசுவாமி சாஸ்திரியார் தலைவராகவிருப்பாரென்றும் அக்கமிட்டியில் தொழிலாளரின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பார்களென்றும் தெரிகிறது.

கல்கத்தாவிலுள்ள எபிபெனி எனும் ஒரு கிறிஸ்தவப்பத்திரிகை இந்து விதவைகளில் நூற்றுக்கு 99 பேர் விபசாரம் செய்து ஜீவனம் செய்பவர்களென்று எழுதியது. வங்காள வக்கீல் ஒருவர் இப்பத்திராதிபரின் மீது, அவமானமாக எழுதியதற்காக ஹைகோர்ட்டில் வழக்குத் தொடுத்திருக்கிறார்.

ஆப்கானிஸ்தானத்தில் போல்ஷிவிக்கர்கள் படையெடுப்பார்களென்று பயந்து ஆப்கானிய வியாபாரிகளில் ஒரு கூட்டம் இந்தியாவுக்கு வந்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

ஆப்கானிஸ்தானத்தில் போல்ஷிவிக்கர்களால் அல்லல் ஏற்படுமென்று அஞ்சி ஒரு சமயம் அமீர் தமது சிம்மாசனத்தைக் காலி செய்துவிடலாமென நினைக்கின்றனராம்.

"பஞ்சாப் சாகுன்" என்ற ஹிந்தி பாஷையில் வெளியான ஒரு துண்டுப் பிரசுரம் அச்சுச்சட்டத்தின் கீழ் பறி முதல் செய்யப்பட்டிருக்கிறது.

வட இந்தியாவிலுள்ள ஜலந்தர் என்னும் கண்டோன்மென்டில் ஐரிஷ் துருப்புகளுக்குள் குழப்பமுண்டாகியது. அயர்லாந்திலிருந்து செய்திகள் வந்ததன்பயனாக மேற்கண்டவிடத்திலிருக்கும் துருப்புகள் அதிகாரிகளுக்கு மனக்கலக்கம் உண்டு பண்ணினவென்று ஓர் ஆங்கிலப் பத்திரிகை கூறுகிறது.

இம்மாதம் 3 ந்தேதி திரிச்சி லாலுகுடி ஹைஸ்கூலை யொட்டிப் புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் ஜில்லா போர்டு பிரிஸிடெண்டான மிஸ்டர் டி. தேசிகாசாரியாரால் திறந்து வைக்கப்பட்டன.

முஸ்லிம்கள் மசூதிகள் முன்பு இந்துக்கள் மேளதாள மடித்துச் செல்வதனால் இரு சமூகத்தினர்களுக்கும் சண்டை சச்சரவுகள் உண்டாவதைத் தடுக்க ஆலோசனை செய்ய உத்தியோகஸ்தரல்லாத இந்துக்களும் முஸ்லிம்களும் அடங்கிய கமிட்டி யொன்றைச் சென்னைக் கவர்ன்மெண்டார் சில நாட்களுக்கு முன்பு ஏற்படுத்தியுள்ளார். அதன் முதல் கூட்டம் சென்ற திங்கட்கிழமை காலை சென்னையில் கூடியது.

கல்கத்தாவிலுள்ள பிரபல வக்கீலும் தேசபக்தருமான மிஸ்டர் ஸி. ஆர். தாஸுக்குக் கவர்ன்மெண்டார் யுத்த தளவாட நடவடிக்கைகளின் வழக்குகளைப் பரிசீலனை செய்ய ஐம்பதினாயிரம் ரூபாயும் தினமொன்றிற்கு 1500 ரூ பீசும் கொடுத்து வருகிறார்கள்.

மைசூர் சமஸ்தானத்திலுள்ள சிவ சமுத்திரம் நீர்வீழ்ச்சியினின்று 1918-19ம் வருஷத்தில் 102, 520, 000 யூனிட்டுகள் கொண்ட மின்சார சக்தி உற்பத்தியாக்கப்பட்டது. 1917-18ம் வருஷத்தில் 98, 087, 900 யூனிட்டுகள்கொண்ட சக்திதான் உண்டாகியதென்றும் சென்ற வருஷத்தில் 4, 442, 100 யூனிட்டுகள் சக்தி அதிகத்திற்குக்காரணம் ஜனங்கள் மின்சாரவிளக்கும், மின்சாரவிசிறியும் அதிகமாக விரும்பியதாகுமென்றும் சமஸ்தான எலெக்டரிக் இன்ஜினீர் தம் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார்.

கிலாபத் விஷயம் இந்தியர்களெல்லோரையும் பொறுத்ததென்றும் அதில் சாதி, மதம், வித்தியாசங்கள் ஒன்றும் கிடையாவென்றும் லாலா லஜபதிராய் விளக்கியிருக்கிறார்.

வெளிநாடு

இங்கிலாந்தில் ஸ்திரீகளுக்குள் சுருட்டுப்பிடிக்கும் பழக்கம் அதிகமாகி வருகிறதென்றும் இப்பழக்கத்தைஉடனே தடுக்காவிடில்குடும்பவாழ்க்கை கெட்டுவிடுமென்றும் "சர்ச்சிரிவ்யு" என்னும் பத்திரிகையில் ஒரு பாதிரி கிருபர் வருத்தப்பட்டு எழுதுகிறார்.

துருக்கிசமாதான உடன் படிக்கை முக்கிய அம்சங்களில் துருக்கி இஷ்டப்பிரகாரம் மாற்றப்படாதென்று நேசக்கட்சியார் தீர்மானித்துவிட்டனரென்று ஒரு செய்திகூறுகிறது.

சர்வதேசத் தொழிலாளர் மகாநாட்டிற்கு இந்தியத் தொழிலாளர்களின் பிரதிநிதியாகலாலா லஜபதிராய் அனுப்பப்பட வேண்டுமென்று பம்பாயிலுள்ள சுமார் 14 தொழிலாளர் சங்கத்தார்கள் இராஜப்பிரதிநிதிக்கு ஒரு தந்தி அடித்துள்ளார்கள்.

ஜெனரல் டயரின் செயல்களைப்பரிசீலனை செய்த இராணுவக்கமிட்டியார் அவர் தவறுதலாக ஜலியன் வாலாபாக்கில் கூடியிருந்த ஜனங்களைச்சுட்டுவிட்டாரென்று தீர்ப்பு செய்துவிட்டார்கள்.

அயர்லாந்தின் தலைநகராகிய டப்ளின் நகரிலுள்ள முனிஸிபல் சபையினர் ஒரு தீர்மானம் செய்து, அதில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குத் தங்கள் கணக்குப்புத்தகங்களைக் காண்பிப்பது கூடாதென்றும், இனி அப்புத்தகங்களை ஐரிஷ்குடியரசு கவர்ன்மெண்டாருக்குக் காண்பிக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

சீனாவில் ராஜ்யப்புரட்சி ஏற்பட்டு இராணுவத்தலைவர்கள் தங்களிஷ்டம்போல் படைகளைச்சேகரிப்பதும் நகரங்களைத் தாக்குவதுமாயிருக்கிறார்கள்.

ஆசியா மைனரில் கலகம் அதிகமாகிக்கொண்டு வருகிறது. சுமார் ஆயிரம் கொள்ளையர்கள் கிராமங்களைக் கொள்ளையடித்தும் வீடுகளைக்கொளுத்தியும் வருகிறார்கள்.

ஆகாயமார்க்கமாக இந்தியாவிலிருந்து பிரான்ஸிலுள்ள மார்ஸெயில்ஸுக்குத் தபால்களைக் கொண்டுபோக ஆலோசனைகள் செய்யப்படுகின்றன.

இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டல், வெஸ்டன் முதலியவிடங்களில் வேலைசெய்யும் காஸ்லைட் தொழிலாளர்களில் இரண்டரை லக்ஷம்பேர் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

தபால் சேவகர்களின் யூனியன்

மன்னார்குடி தாலுக்காவிலுள்ள தபால் சேவகர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து தங்களுக்குள்ள குறைகளையெல்லாம் முறைப்படி மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து அக்குறைகளை நீக்கிக்கொள்ள நாளது மாசம் 11வ மாலை 6 மணிக்கு இந்த ஊர் நாஷனல் ஹைஸ்கூல் சங்கம் ஹாலில் ஒரு கூட்டம் கூடினார்கள். அக்கூட்டத்திற்கு மன்னார்குடி தாலுக்கா போர்டு பிரிசிடெண்டும் பிரபல மிராசுதாருமான ஸ்ரீமான் ராவ்பகதூர் கே. ஜி, சீனிவாசமுதலியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார் அக்கூட்டத்தில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

(1) போஸ்ட்மென் வில்லேஜ் போஸ்ட்மென் இவர்கள் சம்பளம் ரூபாய் முப்பது முதல் 50 வரையில் ஏற்படுத்தவேண்டும்.

(2) மெலஞ்சர்கள், மெயில் பியூன்கள், பாக்கர்கள், லெட்டர்பாக்ஸ் பியூன்கள் இவர்களுக்குச் சம்பளங்கள் பதினைந்து ரூபாய் முதல் 25 ரூபாய் வரையில் கொடுக்க வேண்டுமென்றும் போஸ்ட்மென் வில்லேஜ் போஸ்டுமென்களுக்கு வருஷம் 1க்கு ஒரு ரூபாய் வீதம் சம்பளம் ஜாஸ்தி கொடுக்க வேண்டுமென்றும்.

(4) போஸ்ட்மென், வில்லேஜ் போஸ்ட்மென்களுக்குப் பிரிவிலேஜ் லீவ் இருந்தால் போஸ்டாபீஸ் ரூல் பிரகாரம் லீவ்கேட்கும் காலத்தில் காசுவல் லீவாகிலும், பிரிவிலேஜ் லீவாகிலும் எந்தெந்த போஸ்ட்மென்கள் கேட்கின்றார்களோ அந்த லீவ் தாமதமில்லாமல் கொடுக்கவேண்டுமென்றும்,

(4) போஸ்ட் மென்களுக்கும், வில்லேஜ் போஸ்ட்டுமென்களுக்கும் கவர்ன்மெண்டார் கட்டிடம் அல்லது வீட்டு வாடகை 100 க்கு 25-0-0 வீதம் கொடுக்க வேண்டு மென்றும்.

(5) போஸ்ட் மென்களுக்குப் பத்துவருஷ சர்வீஸுக்கு பிறகு கிளர்க்குவேலை அல்லது பிராஞ்சு போஸ்ட் மாஸ்டர் வேலையாவது தவக்கமில்லாமல் கொடுக்வேண்டு மென்றும்,

(6) இப்போது இருக்கும் முப்பது வருஷ சர்விஸ் என்பதை இருபது வருஷமாகச் செய்ய வேண்டு மென்றும்,

(7) ஹெட் ஆபீஸ்களில் கொடுக்கப் பட்டிருப்பது போல் இரண்டு உடுப்புகள் கொடுக்க வேண்டியதென்றும்,

(8) மழை, வெயில் காலங்களில் டிலிவரிக்குப் போகும் காலங்களில் மழை டிரஸ், குடை, வகயரு கொடுக்க வேண்டுமென்றும்.

(9) போஸ்டு மென்கள், வில்லேஜ் போஸ்ட் மென்களுக்குப் பதிலாக இரவில் காவலுக்கு அவசியமானால் தனியாக வாச்சர்களை நியமித்துக் கொள்ள வேண்டுமென்றும்,

(10) போஸ்ட் மென்களில் எட் ஆபீசுக்கு மாற்றக் கூடியவர்களை மாற்ற வேண்டு மென்றும்,

(11) போஸ்ட்டு மென்கள், வில்லேஜ் போஸ்ட் மென்கள் இவர்கள் மூன்று மைலுக்கு அப்பால் போனால் நாலணா வீதம் அலவென்ஸ் கொடுக்க வேண்டு மென்றும்,

(12) எட் ஆபீஸ், சப் ஆபீஸ், பிராஞ்சாபீஸ் என்ற வித்தியாசமில்லாமல் நடத்த வேண்டுமென்றும்.

(13) இவர்களுடைய வேலைகளை குறைக்கும் படிக்கும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

எதிரொலிகள்.

தேசபக்தர்கள் கவனிக்க

ஓ! கடவுளே !! நாங்கள் பிரார்த்தித்தாலும் பிரார்த்தியாவிட்டாலும் நல்லதெல்லாம் எங்களுக்குத் தருவீராக. நாங்கள் வேண்டுமென்று பிரார்த்தனைகள் பல புரிந்தாலும் தீயவற்றை விலக்குவீராக :—பிளேட்டோ.

* * * *

சில திராட்சைப்பழ ரசங்கள் தித்திப்பும்புளிப்புமாக இருப்பது போன்று ஒரு மனிதனே சாந்தனாகவும் கோபியாகவும் இருக்கக்கூடும்; தோற்றத்தில் மிக்க சாந்தமும் பக்ஷமுமுடையவனாக இருப்பவனோடு நெருங்குங்கால் சகிக்கக்கூடாதவனாகவும் துன்பப்படுத்துகிறவனாகவும் இருக்கலாம்.—ப்ளூட்டார்க்.

* * * *

தேசபக்தர்களுடைய ஐசுவர்யம் மாத்திரமல்ல; அவர்களுடைய ஞானமும் முன்னறிவும் கூடப் பொது உடைமைகளாகும் :-மேனாண்டர்.

* * * *

தேவனே! ஏழைகளையும் தனவந்தர்களையும் உண்டாக்குகிறீர். தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவரும் நீரே. புழுதியில் கிடக்கும் ஏழையை உயர்த்துகிறீர். சாணக் குப்பையில் கிடக்கும் பிச்சைக்காரனை உயர்த்துகிறீர். எங்கு? அரச பதவிக்கு.—சாமுவேல்.

* * * *

நமக்குப் பின் வரும் சந்ததிகளை நிலைபெறச் செய்பவர்கள் நம் நாட்டு ஸ்த்ரீகளே. சிறுவர் சிறுமிகளை வளர்த்துப் படிப்பிக்கிறவர்கள் தாய்மார்களல்லவா? இவ்வாறிருக்க, அவர்கள் ஞானசூன்யர்களாயிருந்தால் நம் ஜாதி ஈடேறுவதெப்படி.—ஸர்குருதாஸ் பானர்ஜி.

விசேஷ வியாசங்கள்.

ஒத்துழையாமையும் சட்ட சபை எலெக்ஷனும்

லோகமான்ய பாலகங்காதர திலகரின் அபிப்பிராயத்தை முன்னிறுத்திப் பூனாவில் பிரசுரமாகும் "மராட்டா" பத்திரிகை மேற்கண்ட விஷயமாகப் பின்வருமாறு எழுதுகிறது:—

லாலா லஜபதிராய் புதியசட்ட சபைக்குத்தாம் அபேட்சகராக நிற்க பிரியமில்லையென்றும் மற்ற காங்கரஸ்காரர்களும் சட்டசபைக்குப்பிரதிநிதிகளாக நிற்கக்கூடாதென்றும் இரண்டு காரணங்களை முன்னிட்டுப் பகிரங்கம்செய்திருக்கிறார்.

முதலாவதாக, இந்தியாவின் வருங்கால நிலையைச் சரியானபடி அமைப்பதாகச் சொல்லிக்கொள்ளும் நம் அதிகாரிகளின் மனோநிலை இந்தியா கவர்ன்மெண்டாருடைய ரிபோர்ட்டினின்றும் இந்தியாமந்திரியின் கடிதத்தினின்றும் நன்கு வெளியாயிருக்கிறது. மேலும் தங்கள் இனத்தார்களைக்காக்கும் பொருட்டு அவர்கள் நியாயத்தைப்புறக்கணிக்கிற தன்மையும் அவர்களிடமுள்ள நிறத்துவேஷமும் மேற் குறிப்பிட்ட அதிகாரிகளின் ரிபோர்ட்டுகளினின்றும் தெரிகின்றன. சுருக்கமாகக்கூறுமிடத்துப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிற்கு அஸ்திவாரம் போன்றவைகளென்று சொல்லப்படும் நியாயம், சமூகக்கருணை, சமத்துவம், சுதந்தரம் முதலிய குணங்கள் அசைக்கப்பட்டுவிட்டன.

இரண்டாவதாக, பஞ்சாப் அதிக்கிரமங்களுக்குப் பொறுப்பாளியாகவுள்ள அதிகாரிகள் இன்னும் உத்தியோகத்திலிருப்பதானது இந்தியர்களுக்கு ஒரு பெருத்த அவமானமாகும். இந்த அவமானத்தை ஒரு நிமிஷம்கூட சுயமதிப்புள்ள எந்தமனிதனும் சகித்திருக்கமாட்டான்.

பஞ்சாப் விஷயங்கள் சம்பந்தப்பட்டமட்டில் பொதுவாக ஜனங்களெல்லோரும் ஏகமனதுடன் கவர்ன்மெண்டினிடமிருந்த நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். இதனால் கேவலம் மிருகசக்தியைக் கொண்டு கவர்ன்மெண்ட் நடத்தப்படுகிறதென்ற எண்ணம் எல்லோருடைய மனதில் ஊன்றிவிட்டது. இந்நிலையில் லாலாலஜபதிராய் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டினிடம் வைத்திருந்த சிறிது நல்லெண்ணமும் பஞ்சாப் சம்பவத்தால் அடிபட்டுப்போனதுபற்றி யாரும் ஆச்சரியமடைய வேண்டுவதில்லை.

அநீதி, மானிடக்கருணையின்மை முதலிய துர்க்குணங்களைக்கண்டு மனோவேதனையடைந்து லாலாலஜபதிராய் காங்கரஸ்காரர்கள் கவுன்ஸிலைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்று ஒரு யோசனை கூறியிருக்கிறார். ஒருகால் காங்கரஸ்காரர்கள் கவுன்ஸிலுக்கு அபேட்சகராக நின்றால், அவர்கள் அங்குச் செல்லவொண்ணாதபடி செய்ய ஒரு கமிட்டியும் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் அறிவித்திருக்கிறார்.

மகாத்மா காந்தியடிகள் கவுன்ஸிலைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்று லாலா லஜபதிராய் கூறியுள்ளதை மனதார ஆதரிக்கிறார்கள். கிலாபத்விஷயமும் பஞ்சாப்விஷயமும் திருப்திகரமாக முடிவுசெய்யப்படாதவரையில் வோட்டர்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்காமலிருக்கும்படி அவர்கள் போதிக்கப்பட வேண்டுமென்றும் காந்தியடிகள் வற்புறுத்துகிறார்கள். இவ்வாறு லாலாலஜபதிராயும் மகாத்மா காந்தியும் சட்ட சபைகளைப்பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்று யோசனை கூறும்போது இந்தியர்கள் ஒருவிதமாகத் தீர்மானத்திற்கு வரவேண்டும்.

ஒத்துழையாமையைப்பற்றிநாம் மேலிழந்தவாறு யோசித்தல்கூடாது. முன்னறிவோடும், தைரியமாகவும்நாம் இவ்விஷயத்தை ஆராய்ச்சிசெய்யவேண்டும். தேசத்தின் தற்காலநிலையை நாம் கவனிக்கவேண்டும். ஒத்துழையாமையை அனுஷ்டித்தால் நாம் கோரியவிருப்பம் நிறைவேறுமா? என்பது கேள்வி. அதாவது தேசத்தில் முழு ஜனப்பொறுப்பாட்சி ஏற்படுவதற்கு வழி உண்டாகுமா? என்பதை நாம் ஆலோசனை செய்யவேண்டும். இங்கிலாந்திலும் இந்தியாவிலும் அதிகாரிகளால் செய்யப்பட்ட கொடிய அக்கிரமங்களுக்கு ஈடுசெய்யப்படாமலிருந்தால், நாம் கவன்மெண்டாருடன் ஒத்துழையாமலிருக்கவேண்டுமென்ற விஷயம் தெளிவாகவிருக்கிறது.

இப்போது நாம் கேட்பவைகளென்ன? டயர், ஓட்வியர், பாஸ்ஒர்த்,ஸ்மித் முதலிய குற்றவாளிகள் சரியானபடி தண்டிக்கப்பட வேண்டுமென்பதாகும். பஞ்சாப் சம்பவங்களுக்குப் பொறுப்பாளியாகவிருந்த லார்ட்செம்ஸ்போர்டும் உத்தியோகத்தினின்று நீக்கப்படவேண்டும். நாம் இன்னும் என்ன கேட்கிறோம்? பஞ்சாபில் செய்யப்பட்ட அக்கிரமங்கள் இனி தேசத்தில் எந்தவிடத்திலேனும் நிகழாமலிருக்க முழு ஜனப்பொறுப்பாட்சி ஏற்படுத்தப்படவேண்டுமென்று கேட்கிறோம். முழு சுயராஜ்யமொன்றே நம்முடைய கஷ்டநஷ்டங்களைப் போக்கக்கூடியது. இஃதொன்றுதான் இந்தியர்களின் மனதை ஆறுதல் செய்யக்கூடியது. இந்நிலையில் சட்டசபைகளைப் பகிஷ்காரம் செய்வதால் நாம் கோரிநிற்கிற சுயராஜ்யம் கிடைக்குமா? என்று நாம் கேட்கத்துணிகிறோம்.

சந்தேகம்கொள்ளக்கூடாது

மேற்கண்டவாறு எழுதுவதால் நாம் ஒத்துழையாமைக்கு எதிரானவர்களென்று படிப்பவர்கள் சந்தேகம்கொள்ளக்கூடாது. நாம் முன்னர் பகிஷ்காரம்வேண்டுமென்று கூறியுள்ளோம். இன்னமும் அதை விரும்புவோம். இதில் நமக்கு நம்பிக்கையுண்டு. எல்லாவித நியாயக்கிளர்ச்சியின் கடைசி முடிவானது கவர்ன்மெண்டாருடன் ஒத்துழையாமலிருப்பதாகும்.

பிடுங்கிக்கொள்வதுதான் வழி.

ஆனால் தேசத்தின் தற்காலநிலையில் பகிஷ்காரம் வேண்டுமா? என்பதை ஆராயவேண்டும். காந்தியடிகளாரும் லாலாலஜபதிராயும் கூறும்யோசனையை நாம் அங்கீகரிக்கவில்லை. பிறகு நாமென்ன செய்யவேண்டும்? வோட்டர்களிடம் சென்று கவர்ன்மெண்டை நமக்கு இணங்கும்படிசெய்யும்பிரதிநிதிகளுக்குத்தான்வோட்கொடுங்களென்று நாம் போதித்துத் தேசத்தின் நெருக்கடியான நிலையை அவர்களுக்கு நன்றாக விளக்கவேண்டும். வேறெந்தவிதமான கவர்ன்மெண்டும் இந்தியர்களுக்குத் திருப்தியைக் கொடுக்காதென்று பார்லிமெண்டாருக்குநாம்அறிவித்துவிடவேண்டும். அதிகாரவர்க்கத்தாரிடமிருந்து இந்தியர்கள் முழுஜனப்பொறுப்பாட்சியைப் பிடுங்கிக்கொள்ள வேண்டுமென்பதைத்தவிர வேறு வழியொன்றுமில்லையென்பதை வோட்டர்களுக்கு அறிவுறுத்தவேண்டும்.

நாம் கோரியவைகளைக் கவர்ன்மெண்டார் திருப்திசெய்து நமக்கு முழுஜனப்பொறுப்பாட்சி வழங்கினால் நாம் கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைப்போம். இல்லாவிடில் கவர்ன்மெண்டின் ஆட்சி நிர்வாகம் நடைபெறாமலிருக்கச்செய்யும் பிரதிநிதிகளையே நாம் தெரிந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்புவோம். அவர்களைக் கொண்டு ஒத்துழையாமை என்னும் கொள்கையை அனுஷ்டிக்கும்படி செய்வோம். இஃதொரு முறையினால்தான் இந்தியர்கள் தங்களுடைய கௌரவத்தை நிலைநிறுத்தமுடியும்.

இந்தச்சமயத்தில் நாம் கூறிய யோசனையை எல்லோரும் கவனிக்கவேண்டும். அதிகாரவர்க்கத்தினர்கள் திறமையுடைய தேசியக்கட்சியினர்களைச் சட்ட சபைக்கு வரவொட்டாமலிருக்க முயர்ச்சிகள் செய்வார்கள். மிதவாதிகள் அதிகாரவர்க்கத்தாருடன் ஒத்துழைக்கத் தயாராயிருக்கும்போது அவர்களைக்கொண்டு அதிகாரிகள் தங்களுடைய ஆட்சியை நடத்திச்செல்வார்கள். இதைக்கண்ணுற்றுப் பார்லிமெண்டாரும் மௌனம் சாதித்து நிற்பர்.

ஸீன்பீனர்களின் முறை நல்லது.

இந்நிலையில் காந்தியடிகளும் லஜபதிராயும் கூறியுள்ள யோசனைகளின்படி நடந்தால்தேசத்திலுள்ள எல்லாவோட்டர்களும் ஓட்கொடுக்காமலிருப்பார்களென்று சொல்வதற்கில்லை. கொஞ்சம்பேர்வோட்டர்களின் வோட்டைப்பெற்றுமிதவாதிகள்சட்டசபைமெம்பர்களாகி விடுவார்களென்பது நிச்சயம். ஆதலால் அயர்லாந்தில் ஸீன்பீனர்கள் அனுஷ்டிக்கும் முறையை நாம் அனுஷ்டித்துச் சட்டசபைக்குப் பிரதிநிதிகளாகச் செல்லவேண்டும். கவர்ன்மெண்டார் நம்முடைய கோரிக்கைகளைப் பூர்த்திசெய்யாமலிருந்தால் அங்கு அவர்களோடு ஒத்துழையாமலும் சட்டசபையில் உட்காராமலும் வெளியே வந்துவிடவேண்டும். இந்தப்பழக்கம் அயர்லாந்தில் அனுஷ்டானத்திலிருப்பதால் நாம் இதைத்தாராளமாகக் கையாளலாம்.

நெருக்கடியான சமயம்.

சட்டசபைகளைப் பகிஷ்காரம் செய்வதென்பது கூடாதகாரியமாகும். நமது தேசம் க்ஷேமமடைய வேண்டுமானால், நாம் சட்டசபையில் இடம்பெறவேண்டும். அதிகாரிகளோடு போராடவேண்டும். இதைத்தவிர இந்தச்சந்தர்ப்பத்தில் வேறு வழியொன்றுமில்லை யென்பது நம்முடைய அபிப்பிராயம். நமது தேசம் நெருக்கடியான நிலையிலிருக்கிறது. அவசரப்பட்டுக் காரியங்களொன்றும் செய்யக்கூடாது. உலகத்தில் கட்டிடம் கட்டுவது கஷ்டம்; அதை இடித்துவிடுவது சுலபம். ஆதலால் கல்கத்தாவில் கூடும் விசேஷகாங்கரஸ் தீர்மானிக்கட்டும். அஃதொன்றே இப்பேர்ப்பட்ட விஷயத்தை முடிவுசெய்வதற்குத் தகுதியுடையது.

சத்தியாக்ரஹம்.

ஒரு சத்தியாக்கிரஹி எழுதுகிறார் :—

ஸத்யமே உயிர் ; போய் மரணம் ;
அன்பு உயிரளிக்கும்; துவேஷம் கொல்லும்.

இவ்வுலகின் கண் உள்ள ஒவ்வொருவனிடத்தும் இருசக்திகள் உள. ஒன்று அவனிடத்துள்ள சரீரபலம்; மற்றையது அவனது ஆத்ம பலம். இவையிரண்டிலும் முதல் கூறப்பட்டது கேவலமான மிருக பலமேயாகும். ஆத்ம சக்தியே மனிதனிடத்திலுள்ளே தெய்வீகத்தன்மையின் வெளித்தோற்றம். இவ்விரண்டில் எதை மனிதன் கைக்கொள்கிறதென்பதே ஒவ்வொருவனும் யோஜித்தறிவது இன்றியமையாதது.

முன்னாட்களிலோ நம் முன்னோர்கள் ஆத்ம சக்தியின் வலுவினாலேயே தங்கள் காரியங்களை நடாத்தி நின்றார்கள். மற்றையப் பண்டை நாகரிகங்கள் அனைத்தும் குன்றியிருக்க, நமது நாகரிகம் இன்னும் ஓங்கியுள்ளதே இதற்கு அத்தாட்சியாகும். ஆனால் மேனாட்டு நாகரிகம் வலுத்தோங்கியிருக்கும் இந்நாட்களில், கேவலம் பணத்தையே தெய்வமாகப்போற்றி இவ்வுடலையேஉண்மையாகக்கொண்டுவரும் இந்நாட்களில், நம்தேயத்தில் கூட இவ்வாத்மசக்தி ஒளிகுன்றி இருக்கின்றது.

ஆயினும் கண்ணபிரான் புகன்றுள்ளவாறு அநீதி தலையெடுத்து நீதியை மறைக்கும் இக்காலத்தில் புண்யபுருஷரான மகாத்மா காந்தியடிகள் உலகைச் சீர்செய்யத் தோன்றியுள்ளார். இவர் தமது வழியே ஸத்யாக்ரஹ கோஷம் செய்கின்றனர். இதுவே காலம், நேயர்காள்! இவரைப்பின்பற்றி இவர் பின்னரே செல்லுங்கள்.

இச் சத்யாக்ரஹமென்பது என்னை? இதன் பொருள் உண்மை ஆவேசமென்பது. இதன் மூக்கிய கொள்கை என்னவெனில் எக்காலும் உண்மையையே பேச்சிலும் கார்யங்களிலும் கையாளுதலும், துவேஷமின்றியிருத்தலும், அன்பைக்கொண்டே எக்காரியத்தையும் செய்தலும், மிருக பலத்தை நிராகரித்து ஆத்ம பலத்தைக்கொண்டே அனைத்தையும் ஸாதித்துக்கொள்ளுதலுமாகும். இவ்வியக்கத்திற்கு அடிப்படையாகநிற்பது உண்மையும் அன்புமேயாகும். துவேஷமின்மையினாலேயே அன்புமிகும். இவைகளை மேலிட்டுதலே நமது ஆத்ம சக்தியை வளர்க்கும். இது படிப்படியாகவே வளரும். இச் சத்தியாக்ரஹத்தை இருபாகமாகக்கொள்ளலாம். ஒன்று உண்மையையும் தீங்கிழைத்தலின்மையையும் கடைபிடித்தொழுகுதல்; மற்றொன்று இவ்வுலகில் வாழுநாளெல்லாம் துவேஷமின்றியிருத்தல். ஒருவர் ஒரு தீச்செயல்செய்யின் அன்னவர்மேல் துவேஷம் கொள்ளாது அத்தீச்செயல் பயன்படாவண்ணம் செய்தல்வேண்டும். இத்தகைய உணர்ச்சியைக்கொண்டுவிட்டால், கேவலம் மிருக பலத்தை நாடாது, நமது ஆத்ம சக்தியைக்கொண்டே அனைத்தையும் அடையலாம். மிருக பலம் நித்யமானதன்று; குன்றிவிடும்; தீமைக்கும் நன்மைக்கும்போர் செய்யவல்லது. ஆனால், ஆத்மபலமோ நிரந்தரமானது; தீமையை ஒழிக்கவே முன்வரும்; எத்தகைய ஆயுதத்திற்கும், கஷ்டத்திற்கும், அஞ்சாது, சரீரதிடத்தை நோக்கிநிற்காது. இதைக்கடைப்பிடித்தொழுகுதலேமானிடர்க்கழகு. ஒற்றுமையும்பொதுஜனநலமும் இதனாலேயே நல்கும். இதையடைய ஒவ்வொருவரும் செய்தற்பாலது என்னவெனில் எக்காலும் உண்மையையே கைப்பிடித்து யாரிடத்தும் துவேஷம் கொள்ளாதிருக்கப் பழகவேண்டுவது இது தற்காலத்தில் பயிலச் சற்றுக் கஷ்டமாக இருக்கலாம். எனிலும் இதை அனுஷ்டிக்கத் துவக்கிவிட்டால் இலகுவாக நிறைவேற்றிவிடலாம்.

இதையனுஷ்டித்துள்ள ஸத்யாக்ரஹிகள்போர்புரியவேண்டுங்கால், அவர்களுக்குக்கையாள ஓர் ஆயுதளமுளது. அதுவே "சாத்வீக எதிர்ப்பு." அனுஷ்டிப்போர் கஷ்டப்பட வேண்டியிருக்கலாம். இதைக்கையாளுதலில் கொலையும் உயிர்ச்சேதமும் நிகழா. நிற்க, எம் முயற்சியால் தான் கஷ்டமில்லை? பிறர்க்குத் தீங்கிழைப்பதைவிட நாமே கஷ்டப்பட்டு நமது காரியத்தை முடித்துக்கொள்ளுதல் உத்கிருஷ்டமல்லவா? சாத்வீ எதிர்ப்பு என்றால் அநீதியான செயலுக்குட்படாமை. இது பொது விஷயங்களிலும் அரசியல் விஷயங்களிலும் உபயோகிக்கப்பாலது. உதாரணமாக ஒரு தீயசட்டம் ஏற்பட்டால் அதற்குக்கீழ்படியாமல் அதனால் வரும் கஷ்டத்தை அனுபவித்துத் துராக்கிரஹம் கொள்ளாமல் அச்சட்டத்தை ஒழிப்பது ஸத்தியாக்ரஹப்போர். இப்போரில் கஷ்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றேன். சட்டத்தைக் கீழ்ப்படியாமலிருப்பதிலேயே, அம்முறையை அனுஷ்டிப்பவன் கஷ்டத்தை, தண்டனையை எதிர்ப்பார்கிறான்; வேண்டி நிற்கிறான். தண்டிக்கப்பட்டால் அவன் ஜயமடைகிறான். தண்டிக்கப்படாமல் தன் காரியம் சித்திபடைய பெற்றால் அவன் வெற்றியடைகிறான் எவ்வழிலும் இவனுக்குத் தோல்வியென்பதில்லை. எனவே இதிலும்மேன்மையானது எதுவுமில்லையென்பது திண்ணம்.

சாவித்திரியின் சரிதம்.

பண்டிதர் உலகநாதபிள்ளை எழுதியது.

நான்காம் பிரதியின் 11-வது.
பக்கத் தொடர்ச்சி.

என்ன வியப்பு? இதுவரையும் என்னை எவரும் கண்டறியார், இவ்வாறு கேட்டவரும் இல்லை ; இந்நங்கையின் கலங்காத நிலைமையை என் சொல்வேன் ? எனப் புகழ்ந்து, மலர்ந்த முகமும் குளிர்ந்த பார்வையுமாக எதிர் வந்து, "கற்பினிக்கணிகலமே! கேட்பாயாக! யான் யமதருமன் ; காலமுடிந்தவன், உயிரைக் கவர்ந்து செல்வது என் தொழில், இதனால் என்னைக் காலன் என உலகம் கூறும் ; உடம்பினின்றும் உயிரை வேறு படுத்தும் காரணத்தால் என்னைக் கூற்றுவன் என்பார்கள். உன் கணவனது வாழ்நாள் இன்றோடு முடிந்து விட்டது. இவன் நற்குண நற்செய்கை யனுதலால், என் தூதரை அனுப்பாமல் யானே வந்து உயிர் கொண்டு போகிறேன் ; பிறந்தவர் இறப்பர் என்பதை நீ அறியாதவளல்லவே? எவரும் மனத்தானும் நாடற்கரிய என்னைக் கண்ணுற் கண்டனை என்றால், உனது கற்பின் மகிமையை எவராற் சொல்லமுடியும்? இனி யான் போகிறேன். நீ மீண்டு செல்க"? எனப் புகன்றனன்.

அண்ணலே! "நீர் உரைத்தவை யாவும் உண்மையே ; யானோ என்றால் கணவனை விட்டுக் கணப்பொழுதும் பிரிந்திறியாதவள்; உமக்குச் சொல்வது இன்னதெனத் தெரிந்திலேன் ; எவ்வாறாயினும் என்னையும் உடன் வருமாறு கருணை புரிய வேண்டும்" எனத் தொழுதனள்.

" கணவனோடு என்னுலகிற்கு உடம்போடணைந்த காரிகையாருமில்லை ; என்றால் நீ கூட வருவதாகக் கூறுவது தகுமோ? ஆதலால் உன் கணவன் உயிரை யன்றி வேறு எதனைக் கேட்பினும் தருவேன்?" என்றனன்.

" அறக்கடவுளே! நீர் கூறியது உண்மையாயின், கட்புலனின்றி வருந்தும் என் மாமன் சாலுவ நாட்டரசர்க்குக் கண் தெரியவரம் அருள வேண்டும்" எனச் சொல்ல, அவனும் அவ்வாறே வழங்கினோம் எனக் கூறி அப்பாற் சென்றனன்.

" மாதுலன் கண் பெற்றதனால் நமக்கு வந்த நலன் யாது? நாயகனை யன்றி நங்கைமார் பெறும் பேறுமுண்டோ? எவைகளைப் பெற்றாலும், கணவர் இல்லையாயின், காரிகை யார்க்கு அவற்றால் என்ன பயன்?" என்று நினைந்து, முன்போற் பின்தொடர, 'அனிச்சமலரும் அன்னத்தின் தூவியும்

மாதரசிக்கு நெருஞ்சிப்பழம் என்பார்கள்; இதுவோ என்றால், நினைத்தவர் உளத்தையும் மிதித்தவர் அடியையும் சுடும் கொடுஞ் சுரம்; இதிற் கிடப்பனமுள்ளும் கல்லும்; இனி வருவையாயின், நின்கால்கள் கன்றும். அன்றியும் கொப்பளங் கொள்ளும்; ஆதலால், நின் வருகையைத் தவிர்க!" என்றுரைத்தனன் கதிரவன் மைந்தன்.

"தரும தேவே! நாயகனை இழந்து நங்கையார் நடைபிணத் தோடொப்பர் என்றால், நங்கைமார்க்கு உயிர்தம் நாயகனையன்றி வேறுண்டோ? என் நாயகன் உயிரை நீர் கவர்ந்து செல்ல விடுத்திட்டு நான் வறிதே மீளுதல் அடுக்குமோ? உயிர் நீத்த பிணம் உலகிலிருந்து என்ன பயன்? ஆதலால், என்கணவன் சென்ற உலகில் யானும் சேர்வதன்றித் திரும்பி வீடு சென்றிடேன்" என்றனள்.

"மாதரசே" உலகினுக்கு அடாத தொன்றை மீளவும் கூறுதல் அழகோ? நின் காதலன் உயிரை மட்டும் கேட்கவேறு எதனைவேண்டினும் தருவேன்; விரும்பியதனைப் பெற்றுத் திரும்பிச் செல்லுக, என்றுரைக்க, "கோதிலாய்! என் மாதுலன் கண் மாத்திரம் பெற்றதினால் ஆவதென்ன? இழந்த நாட்டினையும் அவர் மீளவும் பெற வரம் தருக" எனக் கேட்க "அவ்வரம் அளித்தேன், நீ மீண்டு செல்" எனக்கூறித் தென்றிசை நோக்கினன் கூற்றுவன்.

"மாதுலன் கண்பெற்று நாடு பெற்றால் காதலன் உயிர் பெற்றதாமோ? கண்ணிழந்த ஒருவன் தான் அதனைப் பெற முயலாமல், கண்கெட்ட பிறனுக்கு அக்கண்ணை அளிக்கவேண்டிக் கடவுளை நோக்கித் தான் வரங்கிடந்த தொக்கும் என் செய்கை; இத்தகைய அறியாமைக்கு யாது செய்வேன்? எனக் கலங்கிப் பின்னும் முன்போற் றொடர்ந்தனள் சாவித்திரியம்மை.

கண்டனன் தென்றிசை நாயகன்; "அம்மே! என்னே நின் பிடிவாதம் இருந்தவாறு? பேறு, இளமை இன்பம் பிணி மூப்பு, சாக்காடு என்கின்ற இவ்வாறும் எவர்க்கும் கருவில் அமைந்தனவன்றோ? இவற்றை மாற்றுவதற்கு யாரால் முடியும்? உன் காதலனுக்கு அன்று அமைத்திட்ட காலம் இன்றோடு முடிந்தது. கழிந்ததற்கு இரங்குவதிற் பயனில்லை. ஆதலின், நீ என்னைத் தொடர்வது நீதியுமாகாது, மற்றும் தருமமும் அன்று. நின் நகர்க்கு நீ மீண்டு செல்வதே தக்கது" என்றுரைத்து வாய்மூடு முன், தேமொழி கூறுவார். 'நான்முகன் படைக்கத் திருமால் காக்கும் பல்லுயிர்த் தொகையையும் அழிக்கின்றவன் நீ என்றால், உன்னினும் ஆற்றல் அமைந்தவர் தேவரில் யாவருளார்? நின் ஆற்றலும் பெருமையும் நினக்குத் தெரிந்தில போலும், நின் அருள் பெற்றவரைக் காலமும் கணக்கும் என் செய்யும்? இலவும் பேசி என்? மாசிலாய்! என் துணைவனோடு என்னையும் கொண்டு சென்று என் துயரம் நீக்கியருள்" என்று கைகுவிக்க, தண்ட நாயகன், "அன்னே: என்ன சொல்லியும் பின் தொடர்வதை விட்டிலாய்; உன் காதலன் உயிரைத் தருதற்கு எனக்குரிமை இல்லை; அதனை விடுத்து வேறு எதனை வேண்டினும் தருகுவேன், கேள்" என, "எந்தாய்! எனது தந்தை மைந்தர் இல்லாமையால் நொந்திருக்கின்றனர்; அவர்க்கு ஆற்றலமைந்த மைந்தர்கள் நூற்றுவரைத் தந்தருள்" என்று கேட்க, "அன்னவாறே அளித்தோம்" எனக் கூறித் தன்னூருக் கரந்தேகினன் காலன்.

அவ்வாறு அவன் செல்வதனைக் கற்பின் திறத்தால் உயர்த்துணர்ந்த நங்கையார் எத்தகைய துன்பமும் நோக்காது, தம் கணவனது உயிரைப் பெறுதல் ஒன்றுமே காரணமாக மறலியைப் பின் தொடர்ந்து செல்ல அவனும், இவளது கற்பின் மகிமையையும் கருத்தின் உறுதியையும் கண்டு வியந்து, முன்போலத் தன் உருககாண வந்து, மங்கையர்க்கு நாயகமே! இந்த அசிபத்திர வனத்தில் பேயும் பூதமும் நடமாடுமே யொழிய மக்கள் எவரும் நடந்திடார். இதனை எடுத்துரைத்து நீ கேட்ட வரங்களை மறாமல் தந்தும், நீ மீண்டிலை; இது நியாயமல்லவே" என்றனன்.

"புண்ணிய சீலர்களைக் கண்ணிற் கண்டால், துன்பம் நீங்கி இன்பம் எய்தும் என்பார்கள். அம்மொழி பொய்ம் மொழியாதல் நன்றோ? தருமவானாகிய நின்னைக் கண்டு சரணடைந்த நான், குறையோடு செல்வது தருமமா? உயிரிழந்த உடலுக்கு ஆடை அணி கலங்களைத் தந்ததுபோல, எனக்குப் பயன்படாத வரங்களை அளித்திட்டனை; ஆளையன்றி அறிவையர்க்கு ஆவனவும் உண்டெனிற் சொல்லுக; என்னுயிர் நாயகனை விடுத்திட்டு நான் வறிதாகத் திரும்பிடேன்; அவர் செல்லும் நல்லுலகிற்கு நானும் வருகின்றேன்; தடுப்பது தகாது" என, மனம் நைந்துருகி நிற்பக்கண்டு, தானும் உள்ளம் குழைந்து, "கற்பிற் சிறந்த இந்நற்பாவை இத்தகைய ஆற்றல் பெற்றதற்குக் காரணம் ஒன்றிருத்தல் வேண்டும்; காரணமின்றிக் காரியம் நிகழாது" எனத் தன்னுளத்தில் நுனித்து நாடினன்.

நாடியபோது, "தாலி தழைக்கத் தையலார் நோற்பது கௌரிவிரதம்; இதனை விதிப்படி அனுட்டித்துத் தேவியின் அருள் நோக்கம் பெற்றவர் இவ்வம்மை; நம்மைக் காண்பதற்கும், இக்கொடுஞ் சுரத்தில் இவ்வளவு நெடுந்தூரம் பின் தொடர்வதற்கும் இவர்க்குத் துணையாயிருந்ததும் இதுவே, இவரதுகணவன் அற்பாயுள் உடையவனெனினும், இவர் நோற்ற விரத பலத்தால், நிறைந்த வாழ்நாள் உடையவனுமினன்" என்பதை உய்த்துணர்ந்தான். "ஆ! ஆ! இதனை முன்னமே ஆராயாமல் கேட்டேன்; தேவியின் கோபத்திற் காளாகாமல் சத்தியவான் உயிரைச் சிறிதேனும் தாமதிக்காமல் விடுத்திட்டு விரத மகிமையைப் பாதுகாப்பேன்" எனத் தனக்குள் முடிவு செய்துகொண்டு, தாயே! நீ மேற்கொண்ட கௌரி விரதம் நின் தாலியைத் தழைப்பித்தது; நின் கணவனும் உயிர் பெற்றான். நீ விரும்பிய வண்ணம் நின்கணவனது உயிரை விடுத்திட யானும் கடமைப்பட்டவனானேன்; உன் நாயகன் உயிரை இப்பொழுதே தந்தேன் தந்தேன்; நீயும் அவனோடிருந்து இல்லறம்நடத்தி மக்களைப்பெற்று இன்புற்று வாழ்வாய்" என வாழ்த்திவிடுத்து, தன் உலகடைந்தனன் தருமன்.

தென்றிசைக் கடவுள் தம்முலகடைந்த பின்னர், சாவித்திரியம்மை, நாயும் நரியும் பேயும் கழுகும் திரியும் கானகத்தில் நம்முயிர் நாயகனது உடலைத் தனியே வைத்து வந்தோம்; யாதாயிற்றோ? என்னும் கவலை மிக்குடையவளாய், காற்றினும் கடிதாக நடந்து கணவனது உடல் கிடந்த இடத்தை அடைந்து, தீங்கு சிறிதுமின்றி இருப்பக் கண்டு மனந்தேறி, அவன் தலையை எடுத்துத் தம் மடியின் மீது வைத்த சிறிதுநேரத்திற்கெல்லாம் உயிர் வந்து அவன் உடலிற் புகவே, நாசி உயிர்த்தது; காற்பெருவிரல்கள் துடித்தன; முகம் விளக்க முற்றது; ஆகம் துவண்டது; கைகள் அசைந்தன; கண்கள் விழித்தன; சத்தியவானும் துயிலுணர்ந்தவனைப் போல எழுந்தான்.

கார்வரக் கண்ட தோகையைப் போலக் களிப்பெய்திய சாவித்திரியம்மை, தம் கணவனோடு சென்று, தாம் பெற்ற வரத்தால் கண் பெற்று நாடெய்திய மாமன் மாமியுடன் சாலுவ நாட்டினை அடைந்து இனிது வாழ்ந்திருந்தனர்.

தஞ்சை ஜில்லா கான்பரன்ஸ்

பாபநாசம்.

காரியதரிசி நமக்கு அறிவிக்கிறார்:—

(1) மேற்படி கான்பரன்ஸ் ஸ்ரீமான் S. ஸ்ரீநிவாசயங்கார் C. I. E. அவர்களின் அக்கிராசனத்தில் கீழ் ஆகஸ்டு 7 8 தேதிகளில் பாபநாசத்தில் கூடும். அச்சமயம் நமதுதேசபக்தர்களும் விஜயம் செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(2) கான்பரன்ஸ் கூடும் கொட்டகை வேலைவெகு மும்முரமாய் நடந்துவருகிறது. இன்னும் ஒரு வாரத்தில் வேலை பூர்த்தியாகும்.

(3) கான்பரன்ஸில் கொண்டுவர வேண்டிய நமது ஜில்லாவைப் பொறுத்த தீர்மானங்கள் ஜூலை மாதம் முடிவுக்குள் கான்பரன்ஸ் ஆபீஸுக்கு அனுப்பப்பட வேண்டும்.

(4) கான்பரன்ஸில் வாலண்டியர்களாகத் தேசகைங்கரியம் செய்யப் பிரியமுள்ளவர்கள் ஜூலை மாதக்கடைசிக்குள் வாலண்டியர்களின் தலைவர் மிஸ்டர் K. R. ராம்பத்ரய்யங்காரவர்களுக்கு எழுதிக் கொள்ள வேண்டும்.

என்ஸலி என்ற இடத்திலிருந்து நான்கு கப்பல்களில் போல்ஷிவிக்கர்கள் பர்ஷியன் விரிகுடாவிலிருக்கும் கரையோரப்பட்டினங்களுக்குள் நுழைந்துவிட்டார்களென்று ராய்டர் செய்தி கூறுகிறது

ஜன நோக்கம்.

தஞ்சை தேசீயப்பள்ளிக்கூடம்

ஐயா,

சென்ற 11ந்தேதி ஞாயிற்றுகிழமை தஞ்சையில் ஒரு தேசீயப்பள்ளிக்கூடம், சென்னை ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீமான் எஸ் ஸ்ரீநிவாசயங்கார் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட தென்பதை நேயர்கள் அறிவார்கள். இப்பள்ளிக்கூடம் எற்படுத்தப்பட்ட தானது நமது தேசமுற்போக்குக்கு ஓர் அறிகுறி யென்றே சொல்லவேண்டும். இப்பள்ளிக்கூடத்தின் முக்கிய நோக்கம் வயது முதிர்ந்த மாணவர்களைத் தேசியப் பிரசார வேலையில் பழக்கி அவர்களைக் கொண்டுப் பிரதி கிராமந்தோறும் கிராமவாசிகளுக்குச் சீர்திருத்த சட்டப்படி ஓட்டர்களின் உரிமைகளையும் பிரதிநிதிகளின் கடமைகளையும் பொறுப்புகளையும், புதிய சட்டத்தின் விவரங்களையும் உள்ளபடி திரித்துக் கூறாமல் அறிவிப்பதாகும். மேலும், இம்மாணவர்கள் காங்கரஸ் வளர்ச்சியையும் தேசத்தின் தற்கால நிலையையும் பெரியோர்களால் நன்குப் போதிக்கப்படுவார்கள். இந்தப்பள்ளிக் கூட அதிகாரிகளின் முயற்சி பாராட்டத்தக்கது. இது போன்ற பள்ளிக்கூடங்கள் மற்ற ஜில்லாக்களிலும் எற்படுத்தப் பட்டால் நமது ஜனங்கள் எல்லாவழிகளிலும் அறிவு பெறுவார்கள். ஆகையினால் இந்நற்காரியத்தை நமது ஜில்லா பிரமுகர்கள் ஆதரித்துப் வேண்டிய உதவிபுரிவார்களென்று நம்புகிறேன்.

தேசாபிமானி.

நகர சுகாதாரநிலை

ஐயா,

தஞ்சைமாநகரின் சுகாதார நிலையைப்பற்றி நான் வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. சுமார் அறுபதினாயிரம் ஜனங்களுக்கு மேலாகவுள்ள இந்நகரத்திற்கு ஒரு சுகாதார ஆபீஸரும் நான்கு சுகாதார இன்ஸ்பெக்டர்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களில் சுகாதார ஆபீஸர் தம் பதவியை ராஜி நாமாசெய்து விட்டுப் போய்விட்டனர். சானிடரி இன்ஸ் பெக்டர்களில் மூவர் தங்கள் உத்தியோகங்களை ராஜி நாமா செய்து விட்டதாகத் தெரிகிறது. மூவர்களில்இருவர் வேலையை விட்டு நீங்குவதற்கு இன்னும் உத்தரவு கொடுக்கப்படவில்லை யென்று அறிகிறோம். விஷய மிவ்வாறிருக்கும் போது, நகர சுகாதார நிலை மிகவும் கேவலமாயிருக்கிற தென்பதைப் பற்றி நான் அறிவிக்கவேண்டுவதில்லை. ஒருவர் நகரத்தை ஒரு வலம் வந்து சில முக்கிய சந்துகளைக் கண்ணுற்றால் அவர் உள்ள விஷயத்தை நன்கறிவரென்பது நிச்சயம். சந்துகளிலுள்ள சாக்கடைகளில் குப்பைகள் போட்டபடியே ஆபாசமாகக்கிடக்கின்றன. இந்தக் கோரக்காட்சியை நிவிருத்தி செய்பவர்யாவர்? முன்னிருட்டுக் காலத்தில் விளக்கு வெளிச்ச மவசியமல்லவா? உதாரணமாகச் சகாநாயகன் தெருவில்விளக்கெரிவதில்லை. அஸ்தமித்தவுடன் மேலக் கோட்டைவாசலில் மேய்ந்து விட்டுத் திரும்பும் எருமை மாடுகளோடு. விளக்கில்லாமலிருப்பதனால் வயோதிகர்களும் ஸ்திரிகளும் முட்டிக்கொள்ள நேரிடுகிறது. அந்தத்தெருவில் நடக்கப் பயங்கரமாயிருக்கிறது. கற்கள் ஓர் இஞ்சு உயரம் தூக்கிக் கொண்டிருப்பதால் நடப்போர்களின் கால் விரல்கள் இரத்த காயமடைகின்றன. இந்நிலையை முனிஸிபல்சேர்மென் கண்ணுற்றுத் தக்க பரிகாரம் செய்வாரென்று நம்புகிறேன். முனிஸிபல் கவுன்ஸிலர்களையும் சேர்மெனையும் நகர சுகாதார நிலையைப் பற்றி அடிக்கடி வரி செலுத்தும் சங்கத்தார் ஞாபகப் படுத்தினால் மிகவும் உதவியாயிருக்கும்.

வரிகொடுப் போன்

கிராமமுனிசீப்புகள்.

ஐயா,

கிராம முனிசீப்புகளிடம் ஒரு விதமான அதிருப்தி எற்பட்டிருக்கின்றது. கவர்ன் மெண்டார் உண்மை நிலையை உணராது கிராமமுனிசீப்புகளைப் புறக்கணித்து அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தாமலிருப்பதானது ஆபத்தாக முடியுமோ வென்று நான் அஞ்சுகிறேன்- கிராம முனிசீப்புகளில் பெரும் பாலோர் தாங்கள் சம்பளம் வாங்காமல், கவர்ன் மெண்டார் திருப்தி கரமான சம்பளம் உயர்த்தும் வரையில், நிறுத்தி வைக்கலாமென்று யோசிக்கிறார்கள். அவர்களுடைய யோசனை என்னவாகுமோ? கிராமாதிகாரிகளின் கஷ்டங்களை உணர்ந்து கவர்ன்மெண்டார் தக்கதுசெய்வது விவேகமாகும்.

ஒரு கிராமமுனிசீப்.

மாணவர்களின் பரிதாப நிலை.

ஐயா,

மாணவர்களுக்கு விஸ்தாரமாகக் கல்வி புகட்டுவது முக்கிய நோக்கமாகக் கொண்டு எற்பட்டிருக்கும் சென்னைச் சர்வகலாசாலை சங்கம் அதை ஒருவாறு கடைப்பிடியாமல் மறந்து நிற்பதைப் பார்க்க நமக்கு மிக்க வருத்தத்தை யுண்டாக்கின்றது. அந்தோபரிதாபம்! 1920 வருஷ இண்டர் மீடியேட் பரீக்ஷைக்கு உட்கார்ந்த 6110 மாணவர்களுள் 1676 பேர்கள் தான் தேறியிருக்கின்றார்கள். இதை நினைக்க நம்மனம் பதருகின்றது. என் செய்வோம்! சென்ற வருஷங்களில் தேறினவர்களின் கணக்கை பார்க்கின் இவ்வருடமாதிரி ஒரு வருஷமும் நிகழ்ந்ததில்லை யென்று நன்கு புலப்படுகின்றது. 1920 வருஷப் பரீக்ஷையின் பாடக் கேள்விகள் சுலபமானவை யென்று ஒருவாறு ஒப்புக் கொண்டாலும், பாக்கி வருஷங்களைவிட, பாடப் புஸ்தகங்கள் குறையெனறு சொன்னபோதிலும் ஆராத்துயரம் கொண்ட மாணவர்களின் நிலையையும். அவர்கள்பெற்றோர்களின் கஷ்டநஷ்டங்களையும் கவனிக்கும்கால் எவர்தான் பரிதாபப்படமாட்டாகள்? யாதுகாரணத்தினால், இப்படிக் குறைச்சலாக மாணவர்கள் பரீக்ஷையில் தேறியிருக்கிறார்களென்று நமக்கு புலப்படவில்லை. நம் கடமையென்ன? பேசாமலிருப்பதா? அல்ல, ஒவ்வொரு ஊரிலும் இவ்விஷயத்தைப்பற்றியும். மாணவர்களின் பரிதாப நிலையைப் பற்றியும் எடுத்துக் கூறமீட்டிங்குள் வைத்து, அதில் ஜனங்கள் தங்கள் அபிப்ராயங்களை வெளியிட்டு, ஒவ்வொரு ஊரிலிருந்தும் நமது புதிய வைஸ்சான்ஸலர் ஸ்ரீமான் கே. சீனிவாச அய்யங்கார் அவர்களுக்கு இன்னும் அதிகமாணவர்களை தேறும்படிசெய்ய எற்பாடுகள் செய்யும் பொருட்டு ஓர் விண்ணப்பம் எழுதுவதே நலம். இதை நம் நேயர்கள் செய்வார்களென்பதில் சந்தேகமில்லை. சென்னைச் சர்வகலாசாலை இவ்விஷயத்தில் கிருபை கூறுவது மிகவும் அவசியமாகும்.

ஒரு மாணவன்.

ஒரு குறை.

நன்னிலம் டவுனில் ஒரு ஹைஸ்கூல் இல்லாதது விசனிக்கத்தக்கதென்றும் பக்கத்துக்கிராமங்களிலிருந்து வெளியூர்களுக்குப் பையன்கள் போய் கஷ்டப்படுவது சகிக்கமுடியாததாயிருக்கிறதென்றும் இதைக் கவர்ன்மெண்டாரேனும் ஜில்லா போர்டாரேனும், கவனிப்பது அவசியமென்றும் ஒரு நிருபர் நமக்கு எழுதுகிறார்.

வோட்டர்களின் ஜாபிதா.

புதிய சட்டசபைக்கு அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்கவேண்டி இப்போது கிராமங்களிலும் நகரங்களிலும் வோட்டர்களின் ஜாபிதா தயாரிக்கப் படுவதாகத்தெரிகிறது. தஞ்சை ஜில்லாவைச்சேர்ந்த சாலியமங்கலத்திலேனும் அதற்குப்பக்கங்களிலுள்ள கிராம்ங்களிலேனும் வோட்டர்களின் ஜாபிதாஇன்னும் தயாரிக்கப்படவில்லையென்றும்கிராம உத்தியோகஸ்தர்களை இந்த ஜாப்தாவைத்தயாரிக்கச்சொன்னால் அவர்கள் மிராசுதார்களுக்குத் தெரியாமலேயே தயாரித்து அனுப்பி விடுவார்களென்றும் ஆகையால் உத்தியோகப்பற்றில்லாதவர்களைக் கொண்டு இது தயாரிக்கப்படவேண்டுமென்றும் ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார்.

இம்மாதம் 11ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் தஞ்சை வந்து சேர்ந்தார். அவர் தஞ்சைப் பிரமுகர்களோடு இராஜிய விஷயங்களைப்பற்றி.பேசிக்கொண்டிருந்தார். பிறகு 12 மணிக்கு ஜில்லாவின் பலபாகங்களினின்று விஜயஞ்செய்திருந்த கனவான்களோடு எலெக்ஷன் விஷயமாகவுள்ளப்பிரசார வேலைகளைப்பற்றி விவகரித்தார். மாலை மூன்று மணிக்குத்தஞ்சையில் தேசீய பள்ளிக்கூடமொன்றை திறந்துவைத்தார். சீர்திருத்த சட்டத்தின் விவரங்களையும், வோட்டர்களின் கடமைகளைம் பிரதிநிதிகளின் பொறுப்புகளையும், காங்கரஸ் வளர்ச்சியையும் பற்றிக் கிராமவாசிகளுக்கு எடுத்து விளக்கவேண்டி நிமித்தம் இப்பாடசாலையில் மாணவர்களைப்பழக்குவது இதன் நோக்கமாகும். மாலையில் தஞ்சைத்தபால் சேவகர்கள் அவரை எதிர்கொண்டழைத்து அவருக்கு மாலைசூட்டினார்கள். ஆறு மணிக்கு மணிக்கூண்டு மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அதற்கு அக்கிராசனம் வகித்துப்பேசினார். அன்றிரவே அவர் போட்மெயிலில் புறப்பட்டுச் சென்னைக்கேகினர்.

சுய ஆட்சி எனது பிறப்புரிமை. ஆதலால், அதை நான் விரும்புகிறேன்:— திலகர்.

* * *

கிளர்ச்சி செய்; கிளர்ச்சி செய்; கிளர்ச்சி செய்; சுய ஆட்சிக் கதவு திறக்கப்படும்:—

தாதாபாய்.

திலகர் பெருமான்.

(௨ம் பக்கம் தொடர்ச்சி)

கண்டித்து வந்ததற்காக இவ் வழக்குத் தொடரப்பட்டதென்றும் அரசவிசுவாசமின்மை அரசநிந்தனை யென்றவிரண்டு வார்த்தைகளின் பொருள் ஒன்றல்லவென்றும் விசாரணைத் தலைவர் தகுந்தபடி ஜூரிக்கு விடயங்களை எடுத்துக்கூறவில்லையென்றும் பல காரணங்களைக் காட்டிப்பேசினார். எவ்வளவோ பிரயாசைப்பட்டும் ஆஸ்குவித்தின் வாதங்களைப் பிரிவிகவுன்சில் ஏற்றுக்கொள்ளாமல் தண்டனை யுத்தரவை உறுதிசெய்துவிட்டார்.

ஆயினும் மேனாட்டுக் கல்வியிற் சிறந்த மாக்ஸ்முல்லர், வில்லியம் ஹண்டர், முதலிய வாக்கிலர்கள் திலகரின் பெருமையையும் அவரது நுண்ணிய அறிவையும் ஓரியனென்ற புத்தகத்தினின்றும் அறிந்தவர்களாதலால், அவர்களெல்லோருமொன்றுகூடி விக்டோரியா மஹாராணியாருக்குத் திலகரை அநியாயமாய்ச் சிறையில் அடைக்கலாகாதென்றும் அவர் கல்வியிற் கரைகண்ட பண்டிதரென்றும் அவரை மன்னித்து விடுதலை செய்யவேண்டுமென்றும் ஒரு விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். அதன் பயனாக ஒரு வருடத்துக்குள்ளாகவே திலகர் சிறையினின்றும் வெளிவந்தார்.

தஞ்சாவூர்.
8—7—20. } ஆர். கணேசன்.

(இன்னும் வரும்.)

26வது சென்னை மாகாண மகா நாடு

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாச ஐயங்காரின் அக்கிராசனப் பிரசங்கம்.

(சென்றவாரத் தொடர்ச்சி.)

விவசாயம்

நான் அதிகநேரம் உங்கள்யாவரையும் தாமதிக்கச் செய்துவிட்டேன். ஆயினும் இன்னும் இரண்டொருவிஷயங்களைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லவிரும்புகின்றேன். இம்மாகாணத்தில் நிலவரி விஷயத்தைக் கவனிக்கவேண்டியது மிக்க அவசியமாயிருக்கின்றது. ஆனால் பல வருஷங்களாய்ச்செய்து வந்த கிளர்ச்சியின் பயனாக சில திருத்தங்கள் ஏற்படும்போல் தெரிகின்றன. வரி செலுத்துவோரின் நன்மையை நாடி நிலவரியைத்திட்டப்படுத்தல், மதிப்பிடும்முறை, வரியை உயர்த்தவோ குறைக்கவோவேண்டியகாலம், ஆகிய இவைகளைப்பற்றி கூடியசீக்கிரம் சட்டம் ஏற்படவேண்டுமெனக்கூட்டுக்கமிட்டியார் முடிவுசெய்திருக்கின்றனர். ஆகவே புதியசட்டசபை கூடியவுடன் ஜனப்பிரதிநிதிகள் இவ்விஷயத்தைக் கவனித்து சட்டம் செய்துகொள்ள முயற்சிசெய்யவேண்டும். பல காரியங்களுக்காகப் பணம் வேண்டிநிற்கும் மந்திரிகளும், அங்கத்தினர்களும் உடனே இவ்விஷயத்தை எடுத்துக்கொள்வார்களென நம்புவதற்கும் இடமில்லை. கவர்ன்மெண்டுக்குப் பணம் அதிகமாக வேண்டியிருந்தால் விவசாயிகளுக்கு அதைவிட அதிகப் பணம் வேண்டியிருக்கின்றது. தற்கால வழக்கப்படி நிர்வாக உத்தியோகஸ்தர்கள் தங்கள் இஷ்டப்படி கிஸ்தியை உயர்த்துவதால் இரண்டு முடிவுகள் ஏற்படுகின்றன.

சொற்ப நிலங்களையுடைய விவசாயி தன்னுடைய நிலைமையை விருத்திசெய்து கொள்ள சக்தியற்றவனாயிருக்கின்றான். கவர்ன்மெண்டார் நாட்டின் செல்வத்தைப் பெருக்கக் கைத்தொழிலை விருத்திசெய்யாமல் வரியையே தங்களின் முக்கியவருமானமாகக் கருதியிருக்கின்றனர். ஆகவே பல்விஷயங்களையெல்லாம் தீரயோசித்துப் புதிய சட்டசபை கூடுமுன் ஒரு சரியான முடிவுக்கு வரவேண்டும். இக்காரியத்தைச் செய்வதற்கு இம்மகாநாட்டாரே விவசாயிகளும் பொது ஜனங்களுமடங்கிய ஒரு கமிட்டியை ஏற்படுத்தினால் நலமாயிருக்குமென நினைக்கின்றேன். சிறிய பட்டாதாரர்களும் அக்கமிட்டியில் ஸ்தானம் பெறவேண்டும்.

கைத்தொழில்.

இம்மாகாணத்தில் கைத்தொழிலபிவிருத்தி மிக்க குறைவாயிருக்கின்றது. கைத்தொழிலிலாகாவும் ஒரே கொள்கையுடனிருப்பதுமில்லை. ஏதாவது செய்துமுடிக்கும் சக்தியும் அதற்கில்லை ஸர் எம். நிக்கல்ஸனைப்போன்ற ஓர் அறிவாளி மேற்குக் கரையிலிருப்பதால்தான் அங்குமாத்திரம் கைத்தொழில் முயற்சிசற்று நடந்து வருகின்றது. ஒரு நாடு யுத்தகாலத்தில் யுத்த தளவாடங்கள் பலவற்றையும் பல கப்பல்களையும்செய்யும்சக்தியைக்கொண்டிருந்தது. ஆனால் நம்மிந்தியா குறிப்பிட்டகாலங்களில் நல்ல யாதாஸ்துகளை வெளிபிடவும், தொழிலிலாகா தலைவர் ஆபீசில் அடிக்கடி மாறுதல்கள் ஏற்படுத்தவுமே யோக்கிதை உடையதாயிருக்கின்றது. இவ்விலாகாவிலிருப்பவர்கள் அக்கறையுடன் வேலை செய்வதாகக் காணோம். இப்பொழுது நமக்குவேண்டியதெல்லாம் அந்த இலாகாவிலிருந்து சரிவர வேலை செய்யக்கூடியவர் ஒருவரே. அவர் இந்தியராயிருப்பின் சாலச்சிறந்தது. கைத்தொழில் விஷயத்தில் மைசூர் சமஸ்தானம் விசேஷ ஊக்கமெடுத்துக்கொண்டு வருகின்றது. கைத்தொழில் கமிஷன் மிக்க ஆடம்பரத்துடன் ஊர்முழுவதும் சுற்றிஆய்விட்டது. ஆனால் எதுவும் கைகூடுவதற்கு ஏற்றகாலம் வரவேண்டும்.

கல்வி.

மாகாணக் காங்கிரஸ் கமிட்டியார் தங்கள் உத்தேச வேலைகளடங்கிய அறிக்கையில் கல்வி விஷயமாய்த் தெளிவாகச் சொல்லப்பட்டவைகளை நீங்கள் யாவரும் ஏகமனதுடன் அங்கீகரிப்பீரென்றே நினைக்கின்றேன். சென்னை யூனிவர்ஸிட்டியைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறவிரும்புகின்றேன். ஒரு இந்தியரை லார்டு விலிங்டன் வைஸ்சான்ஸலராக நியமித்திருப்பதைக்கேட்டு நமக்கு அளவிறந்த ஆனந்தமுண்டாகிறது. முதல் தடவையாக ஸ்திரீகளையும் யூனிவர்ஸிட்டி அங்கத்தினராகச்சேர்த்துக்கொண்டார், ஆனால் செனேட் சபையிலும் சிண்டிகேட் சபையிலும் இன்னும் சில மாறுதல்களை ஏற்படுத்தவேண்டும். இம்மாகாணத்திலுள்ள மாணவர்களுக்கு எஸ். எஸ். எல். ஸி. திட்டத்தை ஏற்படுத்திக் கஷ்டம் விளைத்ததெல்லாம் கல்வியிலாகாவும் ஸிண்டிகேட் சபையுந்தான். அவர்கள் காலேஜில் சேருவதற்கு அதிகக்கஷ்டப்படுகின்றனர்.

ஸிண்டிகேட் சபையார் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை அறிகின்றனரோ என்னவோ தெரியவில்லை. பொது ஜனங்களுக்கும் அதில் செல்வாக்கு உண்டோ இல்லையோ தெரியவில்லை. இம்மாகாணமுழுமைக்கும் ஒரே யூனிவர்ஸிட்டியிருப்பது புராதான கால வழக்கத்தைப்போலிருக்கின்றது. 4 அல்லது 5 ஜில்லாக்களடங்கிய தொகுதிகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு யூனிவர்ஸிட்டி ஏற்படுத்தவேண்டுமென நாம் வற்புறுத்தவேண்டும், இம்மாகாணத்திலுள்ள ஒவ்வொரு காலேஜ்களினின்றும் ஒவ்வொரு பிரதிநிதி செனேட் சபையின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்படவேண்டும். இதற்கேற்றபடி யூனிவர்ஸிட்டி சட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டும். ஹைஸ்கூல்களின் தலைமை உபாத்தியாயர்களுக்கும் சிலபிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் சுதந்தரம் கொடுக்கவேண்டும். செனெட் சபையின் மற்ற அங்கத்தினர்களைப் பட்டதாரிகள் தெரிந்தெடுக்கவேண்டும். இப்பொழுது சான்ஸலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்களைநியமிக்கும் அதிகாரத்தை எடுத்துவிடவேண்டும். அல்லது அவ்வதிகாரத்தைக்கூடியவரையில் குறைத்தாவது விடவேண்டும். ஸிண்டிகேட் சபையில் உத்தியோகப்பற்றில்லாத இந்தியர்களும் ஐரோப்பியருமே அங்கத்தினர்களாக விருக்கவேண்டும். அவர்களில் மெஜாரிட்டியார் கல்வியோடு சம்பந்தம் வைத்துக் கொண்டிருப்பவர்களாகவிருக்க வேண்டும். கல்வி இலாகாத்தலைவராக ஒரு இந்தியரை நியமிக்கும் காலமும் நெருங்கிவிட்டது. அதன் பிறகே ஜனங்களின் விருப்பப்படி நம் நாட்டில் கல்விமுறை ஏற்படும்.

மைசூரில் ஒரு சிறந்த கல்வி நிபுணர் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகவிருக்கின்றார். ஸாட்லர் கமிஷன் செய்திருக்கும் சிபார்சுகள் கல்கத்தாவிற்கே யென்று சொல்லிப் புறக்கணித்துவிடக்கூடாது. சென்னை மாகாணத்திலும் அச்சிபார்சுகளைப் பிரயோகப்படுத்தவேண்டும். இந்தியாவின் எல்லாப் பாகங்களினின்றும் எடுத்த சாக்ஷியங்களைக்கொண்டே அச்சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே அவைகள் யாவும் இந்திய முழுமைக்கும் பொருந்தும்.

கவர்ன்மெண்டு ஆபீஸ்களில் குமாஸ்தா வேலை செய்பவர்களின் குறைகளையும் கவனிக்க வேண்டிய அவசிய மிருக்கின்றது. அவர்களின் வேலை மிக்க பொறுப்புள்ளது. ஆகவே அவர்களின் குறைகளை நீக்கவேண்டியது அத்யாவசியம். உணவுப் பொருள்களின் விலை யேற்றத்தாலும், வேலையும் அதிகமாய்விட்டமையாலும், அவர்களைச் சரிவர நடத்தவேண்டியது முக்கியம். இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் சம்பள உயர்வு அவர்களின் கஷ்டத்தை நீக்கக்கூடியதல்ல. இதைப்பற்றி நீங்கள் கவனித்து அவர்களின் குறைகளை நீங்குவதற்கேற்ற வழிகளை நாடுவீரென நம்புகிறேன்.

தொழிலாளர் இயக்கம்.

தொழிலாளர் இயக்கம் தீவிரமாய் வலுத்துவரும் இக்காலத்தில், தொழிலாளர்களின் விஷயத்தில் சர்வ தேசமும் ஒன்றுபடும் இச்சமயத்தில், நாம தொழிலாளர் விஷயத்தை மிக்க அனுதாபத்துடன் கவனிக்கவேண்டும். தொழிலாளரின் நிலைமை விருத்தியடைய வேண்டுமானால் தொழிலாளர் சங்கங்கள் எங்கும் ஏற்பட வேண்டும். நமது நாட்டின் தரித்திரத்தை ஒழிப்பதற்கும் தொழிலாளர் சங்கங்களே மருந்தாக் விருக்கின்றன. ஆனால் தொழிலாளர் சங்கத் தலைவர்கள் நம் நாட்டில் தொழிலாளர் இயக்கம் இன்னும் இளமையாகவே யிருப்பதை நோக்கியும், இங்கிலாந்திலிருக்கும் தொழிலாளர் சங்கங்களைப் போல நமது சங்கங்கள் இல்லாத் தன்மையையுங் கருதியும் அடிக்கடி வேலை நிறுத்தம் நிகழாமலிருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். வேலை நிறுத்தத்தால் கைத்தொழில் அபிவிருத்திக்குக் குந்தகமேற்படுகின்றது. கைத்தொழில்லாமல் தொழிலாளரும் முன்னுக்கு வர முடியாது. இம்மாகாணத்தில் இவ்வாறு எச்சரிக்கை செய்யவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இங்கு அத்யாவசியம் ஏற்பட்டால் தான் வேலை நிறுத்தம் நடை பெறுவது வழக்கமாயிருக்கின்றது. சென்னையிலுள்ள தொழில்ாளர் சங்கங்கள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. அவைகள் பொது ஜனங்களின் ஆதரவால் சரியான வழியில் நடத்தப்பட்டு வருகின்றன. இன்னும் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பலவுள. ஆனால் அவைகளைப்பற்றியெல்லாம் இப்பொழுது சொல்லவேண்டுமென நீங்கள் எதிர் பார்க்க மாட்டீர்களென்றே நினைக்கின்றேன். நான்கு வருஷம் மறைந்திருந்து இப்பொழுது நம்மைச் சேர்ந்த விஷயங்களைக் கவனிக்க இங்கு வந்திருக்கின்றேன். இந்தக்கான்பரன்ஸின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதால் நான் அதிக அநுபவத்தைக் கொண்டு நாட்டின் நன்மைக்கான காரியங்களுக்காக உழைக்கத் தயாராயிருக்கின்றேன்.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yeilai-amman koil Street, Tanjore.

கிரயமில்லாமல் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மஹானின் மூலிகையும், தாயத்தும் கிடைக்கும்.

சகோதரர்களே! சகோதரிகளே!!

உலக பிரசித்தி பெற்ற அருமையான மூலிகையும், மகிமையுள்ள தாயத்தும் மகத்வமுள்ள மஹானால் எனக்கு கிடைத்து அதனால் உலகிலுள்ள அநேக ஜனங்கள் தீராதென்றெண்ணியதும், நாள் பட்டதுமான குஷ்டம், க்ஷயம், மூலம் முதல் சகலவிதமான வியாதிகளும் பலவிதமான கஷ்டங்களும் கவலைகளும் நீங்கி சகல சவுக்கியத்துடனிருப்பவர்களையும்.

நீண்ட நாளாக புத்திர பாக்கிய மில்லாதவர்களும், கர்ப்பம் உண்டாகி உண்டாகி வீணானவர்களும், அவரவர்கள் மனம்போல் குழந்தை உண்டாகி சந்தோஷத்துடனிருப்பவர்களையும் இப்போதே இந்த நிமிஷமே நேரில் பார்க்கலாம்.

நற்சாக்ஷி கடிதங்களாலும் காணலாம். பிரபலமான பேப்பர்களிலெல்லாம் அடிக்கடி ஆச்சரியமாகும்படியான சந்தோஷ சங்கதிகளை பார்த்திருப்பீர்கள்.

கலியுகத்தில் மஹானின் மகிமை விளங்குகிறது. நாளுக்கு நாள் தூண்டாமணி தீபச் செய்து வருகிறது.

எந்த மதஸ்தர்களும் உபயோகிக்கத் தக்க மூலிகையும், தாயத்தும் அமைந்திருக்கிறது. 3 நாள் மூலிகையின் கிரயம் ரூ. 2—0—0 விகிதம் வியாதிகளுக்கு தக்கபடி எத்தனை நாள் மூலிகை தேவையாகுமோ அதுபோல் கூடும் தொகைக்கு வி. பி. பி,—யில் அனுப்பி வருகிறோ மென்பதும் தாயத்து 1க்கு ரூ. 2 விகிதம் கொடுத்து வருகிறோ மென்பதும் ஏழை ஜனங்களுக்கு கிரயமில்லாமல் கொடுத்துவருவதோடு சாப்பாடும் போட்டு செலவுக்கும் உதவி வருகிறோ மென்பதும் யாற்கெனவே தெரிந்த விஷயம்.

ஏழை முதல் பிரபுக்கள் வரை பொது ஜன நன்மைக்காக தற்காலம் சகல ஜனங்களும் சந்தோஷத்தை யடையவும், பொது ஜனங்களுக்கு நன்மை உண்டாகவும் ஒவ்வொரு குடும்பத்தார்களும் இதற்குப் போஷகராக வேண்டுமென்று கருதி இருப்பதால்

நாளது ஜூலை மீ 31-ந் தேதிக்குள் ஒவ்வொரு குடும்பத்தார்களும் அடியிற் கண்ட விலாசத்திற்கு மூன்று ரூபா மணியார்டர் செய்தனுப்பி தங்கள் பெயரை நமது ரிஜிஸ்டரில் தாக்கல் செய்து கொண்டு ஒவ்வொரு மாதமும் 10 தேதிக்குள் ரூ மூன்று விகிதமே 12 மாதங்களுக்கு மாத்திரம் மணியார்டர் மூலமாக தவறாமல் அனுப்பி வர வேண்டியது.

12 மாதங்களுக்கு மேல் அனுப்பவேண்டியதில்லை. இவ்விதம் அனுப்புவோருக்கும் அவர்கள் குடும்பத்தோர்களுக்கும் எந்தவிதமான வியாதிகள் இருந்தாலும் இனி ஏற்பட்டாலும் எந்த சமயத்தில் எழுதினாலும் நாம் உடனுக்குடனே அதற்கு வேண்டிய மூலிகையோ தாயத்தோ அவைகளை வேண்டியதுபோல் உடனே அனுப்பி வைப்போம்.

மஹானுடைய கிருபையால் உடனே குணமாகும். இந்தப்பட்டி ஜீவியகாலம் வரை வேண்டியதை குடும்பம் பூராவுக்கும் கொடுத்து வரக்கூடும்.

இந்த மாதம் ரூபா மூன்றும் வந்ததும் அப்போதே போஷகராக ரிஜிஸ்டரில் பதிவு செய்து கொண்டு ஒவ்வொருவருக்கும் தேவையானதை அது முதற்கொண்டே அனுப்பக்கூடும்.

எந்த விதமான வியாதியுள்ளவர்களானாலும், பலவித கஷ்டங்கள் உள்ளவர்களானாலும் எதற்காக தேவை யிருந்தபோதிலும் அது விவரங்களை ஆரம்பமுதல் சரிவர விவரமாக எழுதி நாம் கொடுக்கும் ஜீவிய கால ரிஜிஸ்டர் நெம்பரை குறிப்பிட்டு ஒவ்வொரு கடிதங்களிலும் தங்கள் விலாசங்களை தெளிவாக தெரிவித்து வர வேண்டியது.

ஒவ்வொரு போஷகர்களுக்கும் இவ்வருஷம் நாம் அச்சிட்டிருக்கிற வியாதிகளின் விவரம், குறிப்பு, முக்கிய குறிப்பு, புதிய நற்சாக்ஷிகள் முதல் சகல விவரமும் கண்ட "பால சந்திரன் காலண்டர்" என்னும் புக்கும் 2 கலரில் 3 வருஷத்தியகாலண்டரும் அனுப்பி வைபபதுடன்.

புதிதாக ஒவ்வொரு வருஷமும் அச்சிடும் புக்கும் காலண்டரும் இடையில் அப்போதைக்கப்போது அச்சிடும் துண்டு நோட்டீசுகளும் 'பாலசந்திரன்' அனுபந்தங்களும் அப்போதைக் கப்போது அனுப்பி வைக்கக்கூடும்.

ஒவ்வொருவரும் போஷகராக முன் வருவதோடு கூட தங்கள் சிநேகிதர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் இதன் நன்மைகளை விவரமாகச் சொல்லி தங்களால் இயன்ற வரையில் போஷகராக இதில் சேர்த்துவைத்து பொதுஜன உபகாரத்தைச் செய்வதே பெருத்த நன்மையாகும்.

வேண்டியவர்கள் நாளது ஜூலை மீ க்குள் அடியிற்கண்ட விலாசத்திற்கு ரூ. 3 அனுப்பி தங்கள் பெயர்களை ரிஜிஸ்டரில் பதிவு செய்து கொல்லனாம்.

எஸ். ஏ. கே. பிள்ளை,

மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா

---

10 வருஷத்திற்கு பின் ஆண் குழந்தை ஜனனம்

சேன்ற வாரம் கனம் குன்னூர் தாசீல்தாரவர்களால் கிடைத்த கடிதம்

ம-ா-ா-ஸ்ரீ எஸ். ஏ. கே. பிள்ளை அவர்களுக்கு,

மெர்ச்சண்ட் அண்ட் கன்ராக்டர், மேட்டுப்பாளையம்

ம-ா-ா-ஸ்ரீ மேட்டுப்பாளையம் எஸ். ஏ. கந்தசாமி பிள்ளை அவர்களுக்கு அன்புடன் எழுதிக்கொள்வது, எனது பெண்குழந்தைக்கு சுமார் 10 வயதாகிற தென்றும் அதற்குப் பின் குழந்தை பிறக்கவில்லை என்றும், நான் தங்களிடம் சொல்லிக் கொண்டதில் எனக்கு தாங்கள் தங்களுக்கு மஹானால் கிடைத்திருக்கிற மூலிகையும் கொடுத்து உபயோகிக்கும் விவரமும் சொல்லி ஆண் குழந்தையே பிறக்குமென்றும் சொல்லியிருந்தீர்கள். அது போலவே நாம் உபயோகித்து வந்தோம். மஹானின் கிருபையால் இன்றைய தினம் விடியற்காலம் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. இச்சங்கதியை எனது மனபூர்வமான சந்தோஷத்துடன் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள

(Sd.) K. LAKSHMANAIAR,

தாசீல்தார், குன்னூர்